விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka.

# வலம்புரி

பக்கங்கள்: பதின்னான்கு — Valampurii

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 ஐப்பசி 13 வெள்ளிக்கிழமை (30.10.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 315




## ஜெனரல் சரத் பொன்சேகாவின் கூற்றுக்கு கருத்துக் கூற மறுத்த ஊடக அமைச்சர்

(கொழும்பு)

பாதுகாப்பு படைகளின் தலைமையதிகாரி ஜெனரல் சரத் பொன்சேகா அமெரிக்காவில் வைத்து தெரிவித்துள்ள கருத்துக்கள் தொடர்பில் அரசாங்கம் கருத்துக் கூறுவதற்கு விரும்ப வில்லை என ஊடகத்துறை' அமைச்சரும், அமைச்சரவை பேச்சாளருமான அனுர பிரிய தர்சன யாப்பா தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று வியாழக்கிழமை அமைச்சரவை முடிபுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்ட ஊடகத்துறை அமைச்சரிடம் தொடுக்கப்பட்ட வினாவுக்கே மேற்கண்டவாறு பதிலளித்தார்.

பாதுகாப்பு படைகளின் பிரதானி கூறியிருக்கும் கருத்துக்கள் தொடர்பில் அரசாங்கத்தின் நிலைப்பாடு என்ன? என்று கேள்வி எழுப்பியதுடன் படைகளில் பணியாற்று கின்ற உயரதிகாரிகளின் (14ஆம் பக்கம் பார்க்க)

## ஜே.ஆரின் நிறைவேற்று அதிகாரத்தால் பயங்கரவாதம் இல்லாது ஒழிக்கப்பட்டது!

### அரசாங்கம் கூறுகிறது

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி அமரர் ஜே.ஆர். ஜெயவர்த்தனவின் நிறைவேற்று அதிகார முறைமையின் காரணமாகவே பயங்கரவாதத்தை இல்லாதொழிக்க முடிந்ததாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிப்பதென்பது மர முந்திரிகை சாப்பிடுவது போன்று சுலபமான காரியமல்ல என ஊடக அமைச்சர் அனுர பிரிய தர்சன யாப்பா தெரிவித்துள்ளார்.

நிறைவேற்று அதிகார முறையைப் பயன்படுத்தியே பயங்கரவாதம் இல்லாதொழிக்கப்பட்டதாகவும் அதனை எவரும் மறந்து விடக்கூடாது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நிறைவேற்று அதிகார முறையை இல்லாதொழிக்குமாறு கோருவது ஓர் கண்கட்டி வித்தை எனவும் இது ஓர் (14ஆம் பக்கம் பார்க்க)

# சிறுபான்மைக் கட்சிகள் இணைந்து கூட்டணி அமைப்பதில் தீவிர முயற்சி

## ஆளும் தரப்பிலிருந்தும் தாவல்?

(கொழும்பு)

சிறுபான்மைக் கட்சிகள் கூட்டணி ஒன்றை அமைப்பது தொடர்பில் தீவிர கவனம் செலுத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படு கின்றது. ஆளும் கட்சியில் அங்கம் வகிக்கும் சில சிறுபான்மைக் கட்சிகள் ஏனைய சிறுபான்மைக் கட்சிகளுடன் இது தொடர்பாகப் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகவும் குறிப் பிடப்படுகின்றது. (14ஆம் பக்கம் பார்க்க)

## ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகைத்திட்டத்தை பெற நிபந்தனைகளை பூர்த்தி செய்ய வேண்டும்!

### ஐரோ. ஒன்றியத்திடம் பிரி. கோரிக்கை

(கொழும்பு)

ஜி.எஸ்.பி பிளஸ் சலுகைத்திட்டம் வழங்கும் நிபந்தனைகள் முழுமையாக அமுல்படுத்தப்பட வேண்டுமென பிரித்தானியா ஐரோப்பிய ஒன்றியத்திடம் கோரியுள்ளது.

இலங்கைக்கு குறித்த சலுகைத் திட்டத்தை வழங்கும் போது சகல நிபந்தனைகள் தொடர்பிலும் கவனம் செலுத்த வேண்டுமென சுட்டிக் காட்டியுள்ளது.

ஜி.எஸ்.பி சலுகைத்திட்டத்தை வழங்கும் நிபந்தனைகள் தொடர்பில் இலங்கைக்கு சலுகைகள் வழங்கப்பட்டால் அது ஏனைய நாடுகளையும், நாட்டு மக்களையும் பாதிக்கக் கூடும் என எச்சரிக்கை விடுத்துள்ளது.

அதாவது, மனித உரிமைகள் மேம்படுத்துவதன் மூலம் இந்த நன்மையை பெற்றுக் கொள்ளும் நாடுகளில் பாதிப்பு ஏற்படக் கூடுமென தெரிவிக்கப் (14ஆம் பக்கம் பார்க்க)

உள்ளே...

தமிழகத்தின் பிரபல சோதிடர் சிவல்புரி சிங்காரம்

எழுதும் இராகு கேது மாற்றம் உங்களுக்கு எப்படி?

## தமிழீழம் தவிர்ந்த வேறொரு தீர்வை தமிழ் மக்கள் ஏற்கப் போவதில்லை

### ஜெயானந்தமூர்த்தி எம்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழம் தவிர்ந்த எந்தவொரு தீர்வையும் தமிழ்மக்கள் ஏற்றுக்கொள்ளத் தயாரில்லை. தமிழீழத்திற்குக் குறைவான அல்லது தமிழ் மக்களை தாங்களே ஆளக்கூடிய தன்னாட்சித்தீர்வுக்குக் குறைவான தீர்வு எந்த வகையிலும் தமிழ்மக்களின் அரசியல் அபிலாசைகளை பூர்த்தி செய்யப் போவதில்லை என தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜெயானந்தமூர்த்தி தெரிவித்துள்ளார்.

சர்வதேச ஊடகமொன்றுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே ஜெயானந்தமூர்த்தி இதனைத் தெரிவித்துள்ளார். சமஷ்டித் தீர்வு பற்றி தமிழ் தேசியக் கூட்டமைப்பு தற்போது ஆராய்ந்து வருவது பற்றி அவரிடம் கேட்ட போதே மேற்கண்டவாறு கூறியுள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் நாங்கள் 22 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருக்கின்றோம். ஆனால் எங்களில் சமஷ்டித் தீர்வுக்கு எத்தனை பேர் உடன்படுவார்கள் என்பது கேள்விக் குறியான விடயம்.

இலங்கையில் சமஷ்டி முறையிலான தீர்வுத் திட்டத்தின் பிரகாரம் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசனைகளை நிறைவேற்ற முடியாத காணத்தினால் அல்லது அது தோல்வி கண்டதன் விளைவாகவே வட்டுக்கோட்டைத் தீர்மானம் (14ஆம் பக்கம் பார்க்க)

## வவு.,யாழ். நலன்புரி முகாம்களில் இருந்த 4 ஆயிரத்து 91 பேர் நேற்று மீள் குடியமர்வு

(யாழ்ப்பாணம்)

வவுனியா, யாழ்ப்பாணம் நலன்புரி முகாம்களில் இருந்து யாழ். மாவட்டத்தை சொந்த இடமாகக்கொண்ட ஆயிரத்து 415 குடும்பங்களைச் சேர்ந்த 4 ஆயிரத்து 91 பேர் நேற்று மீள்குடியமர்த்தப்பட்டனர் என யாழ். அதிபர் க.கணேஷ் தெரிவித்தார்.

அத்துடன் யாழ்ப்பாண முகாம்களில் இருந்த வவுனியா, மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த 306 பேரும் அனுப்பிவைக்கப்பட்டனர் எனவும் அவர் குறிப்பிட்டார். இது தொடர்பில் யாழ். அரச அதிபர் க.கணேஷ் மேலும் தெரிவிக்கையில்,

வவுனியா நலன்புரி முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள யாழ். மாவட்டத்தை சொந்த இடமாகக் கொண்ட 791 குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 368 பேர் நேற்று யாழ்ப்பாணத்திற்கு அழைத்து வரப்பட்டனர்.

இவ்வாறு அழைத்து வரப்பட்டவர்களில் சாவகச்சேரி பிரதேச செயலக பிரிவைச் சொந்த இடமாகக் கொண்ட 96 குடும்பங்களைச் சேர்ந்த 272 பேரும், கோப்பாய் பிரதேச செயலக பிரிவை சொந்த இடமாக கொண்ட 500 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 490 பேரும் தெல்லிப்பழை பிரதேசசெயலக பிரிவை சொந்த இடமாகக் கொண்ட 195 குடும்பங்களைச் சேர்ந்த 606 (14ஆம் பக்கம் பார்க்க)

## எதிர்க்கட்சிக் கூட்டமைப்பு நவம்பர் 3இல் அறிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசிய கட்சி உட்பட எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து ஸ்தாபித்துள்ள பொதுக் கூட்டமைப்பான ஐக்கிய தேசிய முன்னணி எதிர்வரும் 3ஆம் திகதி உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்படவுள்ளது.

இதற்கான நிகழ்வு சிறி ஜெயவர்த்தனபுர நாடாளுமன்ற கட்டடத்தில் இடம்பெறவுள்ளதால் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார். (ச-14)



# நடராசா பரமேஸ்வரி
# மணி மண்டபம்
## திறப்பு விழா அழைப்பு





2009.11.02

| | | |
|---|---|---|
| காலம் | :- | 2009.11.02 திங்கட்கிழமை |
| நேரம் | :- | காலை 10.00 மணி |
| தலைவர் | :- | நடராசா சத்தியரூபன் அவர்கள்<br>முதல்வர், சிறிநதியா நகை மாளிகை,<br>ஸ்தாபகர், நடராசா-பரமேஸ்வரி மணிமண்டபம். |

பிரதம விருந்தினர்
திரு.க.கணேஷ் அவர்கள் (அரசாங்க அதிபர், யாழ்ப்பாண மாவட்டம்)
சிறப்பு விருந்தினர்
திரு. பா. செந்தில்நந்தனன் அவர்கள் (பிரதேச செயலர், நல்லூர்)
கௌரவ விருந்தினர்கள்
பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை அவர்கள்
(முன்னாள் துணைவேந்தர் யாழ்.பல்கலைக்கழகம்)
திரு.எஸ்.கே.யோகநாதன் அவர்கள் (பீடாதிபதி, யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி)

## திறப்பு விழா நிகழ்வுகள்

❖ பூர்வாங்க கிரியை வழிபாடுகள்
❖ மங்கல விளக்கேற்றல்
❖ மங்கள இசை
❖ திருமுறை ஓதல்
❖ மணிமண்டபம் திறந்து வைத்தல்: பிரதம விருந்தினர் அவர்கள்
❖ நினைவுக்கல் திரை நீக்கல்
❖ வரவேற்புரை: செல்வி ஸ்ரீலதா செல்லத்துரை அவர்கள்
❖ தலைமையுரை : திரு.ந.சத்தியரூபன் அவர்கள்
❖ அருளாசி உரைகள்:
 –ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிகஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள்
 (நல்லை ஆதீன முதல்வர், திருஞானசம்பந்தர் ஆதீனம், நல்லூர்)
 – அமுதகலாஜோதி சிவத்திரு மோகனதாஸ் சுவாமிகள்
 (சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் - செல்வச்சந்நிதி, தொண்டைமானாறு)
❖ பிரதம விருந்தினர் உரை
❖ சிறப்பு விருந்தினர் உரை
❖ வாழ்த்துரைகள்:
 – பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை அவர்கள்.
 (முன்னாள் துணைவேந்தர் - யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)
 –திரு.எஸ்.கே.யோகநாதன் அவர்கள் (பீடாதிபதி யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி)
 – வர்ணனைக் கலாநிதி கவிமாமணி
 மதுரகவி காரை எம்.பி.அருளானந்தன்– J.P.அவர்கள்
 பணிப்பாளர், சைவத்தமிழ் பண்பாட்டுப் பேரவை, ஆசிரியர் ஸ்ரான்லிக் கல்லூரி, யாழ்ப்பாணம்.
❖ கலைஞர்கள் கௌரவிப்பு
❖ நன்றியுரை : செல்வி ஸ்ரீரேகா செல்லத்துரை அவர்கள்
❖ மதியபோசன விருந்து வழங்கல்

நல்லூர் கந்தசுவாமி ஆலய வடக்கு வீதியில் ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலயத்திற்கருகாமையில் எமது பெற்றோரின் ஞாபகார்த்தமாக நிர்மாணிக்கப்பட்ட மணிமண்டப திறப்பு விழாவில் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

465/26, பருத்தித்துறை வீதி,
(நல்லூர் ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலயத்திற்கருகாமை)
யாழ்ப்பாணம்.

திரு. ந.சத்தியரூபன் குடும்பத்தினர்
திரு.கா.செல்லத்துரை குடும்பத்தினர்
தொ.பே.இல. 021 320 5694

(C-3619)


### கார் விற்பனைக்கு

4 சிறி XXXX மைனர் கார் விற்பனைக் குண்டு.

தொடர்பு:-
ஜெ.தயாளன்
அராலி வடக்கு,
வட்டுக்கோட்டை.
071 6377169

(C-3616)


## ஜனாதிபதி மகிந்த நேபாளம் செல்கிறார்

ஜனாதிபதி மற்றும் வெளிவிவகார அமைச்சர் றோகித போகொல்லாகம உள்ளிட்ட குழுவினர் நேற்று நேபாளத்திற்கான விஜயம் ஒன்றினை மேற்கொண்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விஜயத்தின் போது நேபாள ஜனாதிபதி உள்ளிட்ட முக்கிய குழுவினரை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாக ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (ச–3,14)


தென்மராட்சி வரலாற்றில் முதன் முதலாக
மக்களின் சேவையினை
முழுதாகக் கொண்ட முற்றிலும் குளிரூட்டப்பட்ட நெற்கபே

### SATHANA Cyber Net Cafe

எமது சேவைகள்

- இன்ரநெற் புறோசிங் (Internet Browsing) 1 Hour-60/=
- இன்ரநெற் Call அனைத்து நாட்டிற்கும் 1 Min-6/=
- நேரடியாக முகம் பார்த்துக் கதைத்தல் 1 Min-6/=
- ஈமெயில் (E-mail), பக்ஸ் (Fax) மற்றும் இதர சேவைகள்
- அனைத்து விதமான டிசைனிங் (Designing), பிறின்ரிங் (Printing)
- Video Mixing மற்றும் கணனி சம்பந்தமான திருத்த வேலைகள் (Hard Ware Repairing)
- அமெரிக்கன் GREEN Card லொத்தர் விசா நடைமுறைகள்

அனைத்துக்கும் நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம்

### சாதனா சைபர் நெற்கபே

இல. KUF 04, நவீன சந்தை மேல்மாடி,
சாவகச்சேரி.
T.P:-0777696771

(C-3620)


### வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியும், அங்கத்துவ சங்கங்களும் இணைந்து நடாத்தும்

"ஸ்தாபகத் தலைவர்"
அமரர் சு.நடேசு,
மறைந்த பொதுமுகாமையாளர்
அமரர் க.சந்திரராசா நினைவு தினமும்,
கூட்டுறவு தினவிழாவும் புலமைப்பரிசில் வழங்கலும்

**2009**

தலைமை
திரு.க.மெய்யழகன் அவர்கள்
(தலைவர் வலிகாமம் ப.தெ.வ.அ.கூ.ச.கொத்தணி, மானிப்பாய்)

பிரதம விருந்தினர்
மாண்பு மிகு அமைச்சர்,
கௌரவ கே.என்.டக்ளஸ் தேவானந்தா அவர்கள்,
(சமூக சேவைகள் மற்றும் சமூகநலத்துறை அமைச்சரும்,
ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும்)

*காலம்:* 31.10.2009-ம் திகதி சனிக்கிழமை மு.ப 9.30 மணி
*இடம்:* "கலையரங்க மண்டபம்"
(வலிகாமம், கொத்தணி, மானிப்பாய்)

கௌரவ விருந்தினர்கள்
உயர்திரு .பொ.சிவலிங்கம் அவர்கள்,
கூ.அ.உ. ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

உயர்திரு.சந்திர ஜெயவீர அவர்கள்,
(பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, மானிப்பாய்.)

உயர்திரு.கி.ஜீவரட்ணம் (கி பி) அவர்கள்,
தேசிய அமைப்பாளர்,
ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி

உயர்திரு.த. சிவலிங்கம் அவர்கள்,
தலைவர்,
(வட மாகாண ப.தெ.வ.அ.கூ.ச.சமாசம்)

*மேற்படி நிகழ்வில் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.*

*நன்றி*
இங்ஙனம்
பணிப்பாளர்க்ள், பணியாளர்கள்,
வலிகாமம் ப.தெ.வ.அ.கூ.ச.கொத்தணியும்,
அங்கத்துவ சங்கங்களும், மானிப்பாய்.

(C-3621)

ஸ்ரீராம ஜெயம்



## அருள்வளர் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் கோயில்

இணுவில் - மருதனார்மடம்

## ஸ்ரீ சுந்தர பஞ்சமுக ஆஞ்சநேயர் பிரதிஷ்டா

# மஹா கும்பாபிஷேகம்

| | | |
|---|---|---|
| கிரியை ஆரம்பம் | 02.11.2009 | திங்கட்கிழமை காலை 6.30 மணி |
| கிராம அருட்பவனி | 02.11.2009 | திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு ஆலயத்திலிருந்து ஆரம்பமாகி கே.கே.எஸ். வீதி → தாவடி → மானிப்பாய் → உடுவில் → மருதனார்மடம் வழியாக ஆலயத்தை அடைதல். |
| பால் காப்பு | 04.11.2009 | புதன்கிழமை பகல் 12.00 மணிமுதல் |
| | 07.11.2009 | சனிக்கிழமை மாலை 3.00 மணி வரை பக்தர்கள் பால்காப்புச் சாத்தலாம். |
| கும்பாபிஷேகம் | 08.11.2009 | ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணி |

அனைவரும் வருக!
அனுமன் அருள் பெறுக!

இங்ஙனம்
ஆதீனகர்த்தா

(C-3615)

## அங்குரார்ப்பண நிகழ்வு

(சாவகச்சேரி)

தென்மராட்சி பிரதேச மத்தியஸ்தர் சபை அங்குரார்ப்பண நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் சாவகச்சேரி மாவட்ட நீதிவான் அ.பிரேம்சங்கர் மற்றும் தென்மராட்சி பிரதேச செயலர் செ. ஸ்ரீனிவாசன் ஆகியோர் விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளனர்.

தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த அனைத்து கிராம அலுவலர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு மத்தியஸ்தர் சபை செயலாளர் அறிவித்துள்ளார். (ஓ-9-29)

## வலி. மேற்குப் பகுதியில் சட்டவிரோத மின் பாவனை

(பொன்னாலை)

வலி. மேற்குப் பிரதேசதத்தில் சட்ட விரோத மின் பாவனை அதிகரித்து வருவதாக அப் பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

சட்ட விரோதமாக மின் பெறும் பாவனையாளர்கள் பாதுகாப்பற்ற மின்வயர்களைப் பயன்படுத்தி மின் பெற்று வருவதாகவும் இதனால் கால்நடைகள் உட்பட பொது மக்களும் மின் தாக்குதல்களுக்கு இலக்காக வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டிருப்பதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

அரைநிரந்தர வீடுகள் ஓலைக்குடிசைகளில் வாழும் பொதுமக்களே அதிகள்வில் சட்டவிரோத மின்பாவனை இருப்பதால் அவர்களுடைய வீடுகளும் மின்சாரத்தால் பாதிக்கப்பட்டமை என்றும் சுட்டிக்காட்டப்படுகிறது. (6-49)

# குருதிக் கொடையாளர்களை கௌரவிப்போம்

## யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளரின் செய்தி



குருதியானது எமது உடல் நலம் பேணுவதற்குரிய மிக முக்கியமான பகுதியாகும். ஒவ்வொரு ஆண்டும் உலகளவில் பல மில்லியன் உயிர்கள் குருதி மாற்றீடு மூலம் காப்பாற்றப்படுகின்றனர். அவர்களுக்கு பாதுகாப்பான குருதியை போதிய அளவில் வழங்க வழி செய்வது எமது இரத்த வங்கியின் கடப்பாடாகும். பணம் செலுத்தாத தன்னார்வக் குருதிக் கொடையாளர்களின் இரத்த தானத்தின் மூலமே நாம் பாதுகாப்பான குருதியை நோயாளர்களிற்கு வழங்க முடியும்.

எமது மண்ணிலும் போர்க்கால இடர்களுக்கு மத்தியில் குருதித் தேவை அதிகரித்த காலங்களில் கூட பிறர் நலமே பெரிதெனக் கொண்டு குருதிக்கொடை செய்து பல உயிர்களைக் காத்த இன்றும் காத்துக்கொண்டிருக்கின்ற மதிப்பிற்குரிய குருதிக் கொடையாளர்களை இன்றைய நாளிலே நன்றியுடன் நினைவு கூர்வது இச் சமூகத்தைச் சார்ந்த ஒவ்வொருவரதும் கடமையாகும்.

யாழ்.போதனா வைத்தியசாலை இரத்த வங்கியானது வடபிராந்தியத்திலுள்ள வைத்தியசாலைகளிற்கு குருதியை விநியோகிக்கின்ற பிராந்திய பரிசோதனை நிலையமாக விளங்கு கின்றது. இன்று இந்நிலையத்தின் குருதித் தேவையானது முற்று முழுதாக தன்னார்வக் குருதித் கொடையாளர்களின் பங்களிப்பினைக் கொண்டே பூர்த்தி செய்யப்படுகின்றது. ஆகையால் தன்னார்வக் குருதிக் கொடையாளர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதன் மூலமே இந்த நிலையத்தை நாம் அபிவிருத்தி செய்ய முடியும். ஆகையால் இரத்ததானம் இலகுவானது, உன்னதமானது, உயிர் காப்பது என்ற தொனிப் பொருளை எல்லோருக்கும் ஊட்டி அவர்களையும் உங்களுடன் இவ் உன்னதப் பணியிலே இணையச் செய்யுங்கள்.

டாக்டர்.E. தேவநேசன்
யாழ். போதனா வைத்தியசாலை யாழ்ப்பாணம்.

## யாழ். இந்துக் கல்லூரி அதிபரின் வாழ்த்துச் செய்தி



இன்று உலகளாவிய ரீதியில் உயிர்க் கொல்லி நோய்கள் தோன்றி விலைமதிப்பிட முடியாத மனித உயிர்களைக் காவு கொள்கின்றன. அளவற்ற விபத்துக்களால் குருதிப் பெருக்கேற்பட்டு இறப்புகள் அதிகரித்துள்ளன. ஓரளவுக்கு இவ்வாறான இழப்புக்களை ஏனும் கட்டுப்படுத்தி பெறுமதிமிக்க மனித உயிர்களைக் காப்பதற்கு குருதி இன்றி அமையாததாக உள்ளது.

விளம்பரங்கள் மூலமாகவும் இரத்த வங்கி உத்தியோகத்தர்களின் முயற்சியாலும் இன்று குருதி சேகரித்து சேமித்து வைக்கப்பட்டு உயிர்கள் காப்பாற்றப்படுவது மகத்தான பணியாகக் கருதப்பட வேண்டிய ஒன்றாகும்.

இப்பணிகளுக்கு மேலாக காலத்துக்குக் காலம் ஒழுங்காக தாமாகவே முன்வந்து மனமுவந்து குருதி வழங்குவோர் பலரும் இந்நாட்டில் இருக்கவே செய்கின்றர்.

*உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர்* என்ற முதுமொழியை மாற்றிக் *குருதி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர்* என்று கூறினால் கூட அது மிகையாகாது.

ஆகவே தாமாக முன்வந்து கால ஒழுங்கில் குருதி வழங்கி உயிர் காக்கும் இவ் உத்தமர்களைக் கௌரவிக்கும் இம் மலருக்கு எனது வாழ்த்துச் செய்தியைத் தெரிவித்துக் கொள்வதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

**வாழ்க நீடூழி இக்கொடையாளிகள்!**
**வளர்க இவர் தம் பணி**

V.கணேசராஜா
அதிபர், யாழ். இந்துக்கல்லூரி.

## கௌரவிப்பு விழா

காலம்:- 31.10.2009 சனிக்கிழமை
இடம்:- கலைத்தூது கலையகம் பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
நேரம்:- காலை 9.00 மணி

## இ.ச.பே.நாகரத்தினம் அவர்களின் வாழ்த்துச் செய்தி



மானிடனாக பிறந்த ஒவ்வொருவரும் உயிர்வாழவே விரும்புவர். உயிர் உடலில் இருப்பதற்கு இரத்தம் இன்றியமையாதது. இரத்தம் இன்றி உயிருக்காக போராடுபவருக்கு ஒருவன் இரத்தம் தருவானானால் அவர் இறைவனால் ஆசிர்வதிக்கப்படுவர். யாழ். இரத்த வங்கி குருதிக் கொடையாளர்களை கௌரவிக்கும் நிகழ்வு உண்மையில் பாராட்டப்பட வேண்டும்.

குருதிக் கொடையாளர்களின் தன்னார்வ தன்னலமற்ற சேவையினை மக்களுக்கு இனங்காட்டி கௌரவிக்கும் நிகழ்வூடாக மேலும் புதிய குருதிக்கொடையாளர்களை ஊக்குவித்து மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவது இன்றைய காலத்தின் தேவையாகும். ஆகவே காலத்தின் தேவையை உணர்ந்து செயல்படும் அனைவருக்கும் எனது வாழ்த்துக்கள் உரித்தனவாகுக.

இ.ச.பே.நாகரத்தினம்
52,54,கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

நியூ ராகம்ஸ்
இல.7,8,24, நவீன சந்தை (உட்புறம்)
யாழ்ப்பாணம்.

ஸ்ரீ ராஜன் பான்சி ஹவுஸ்
இல.63, 65, 66, நவீன சந்தை
யாழ்ப்பாணம்.

பிறின்ஸி சில்க்ஸ்
இல.9,நவீன சந்தை (உட்புறம்)
யாழ்ப்பாணம்.

காந்தி மோட்டோர்ஸ்
Dealers in:- Dolpin,Car, Motor Spare Parts, Hardware & General Merchants
66, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
T.P.: 021 2222136






யாழ்.இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலையில் கடந்த 21, 22 ஆம் திகதிகளில் திருநெல்வேலி வட்ட லயன்ஸ் கழகத்தின் அனுசரணையுடன் பற்சிகிச்சைக் கருத்தரங்கு நடைபெற்றது. இதில் பாடசாலை அதிபர் திருமதி த.அ.துரைசிங்கம் தலைமையுரையாற்றுவதையும், பல்வைத்திய நிபுணர் டாக்டர் இ.கதிர்காமநாதன் கருத்துரை வழங்குவதையும், மாணவி ஒருவருக்கு பற்பசையும் பற்தூரிகையும் அன்பளிப்பாக வழங்கப்படுவதையும், அருகில் லயன்ஸ் கழக உறுப்பினர்கள் நிற்பதையும், நிகழ்வில் கலந்துகொண்ட மாணவிகள் மற்றும் பெற்றோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

## புதிய யோகாசன வகுப்புகள்

(யாழ்ப்பாணம்)

சிவானந்த மகரிஷி யோக நிலையத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள புதிய யோகாசன வகுப்புக்கள் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணிக்கு கந்தர்மடத்தில் உள்ள (ஸ்ரீமகாதேவ ஆச்சிரமம்) வேதாந்த மட தியான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வெள்ளி, சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெறும் இந்த வகுப்புகளில் ஆண்கள், பெண்கள், நோயாளிகள் என வயது வேறுபாடின்றி அனைவரும் கலந்துகொள்ளலாம் என்பது குறிப்பிடத்தக்கது. (ஓ)

✠✠✠

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீஇராமகிருஷ்ண சமிதியின் ஏற்பாட்டில் புதிய யோகாசன, தியான வகுப்புக்கள் கடந்த 25 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டுள்ளன. பிரதி சனி மற்றும்ஞாயிற்றுக்கிழமைகளில் 6.30 மணிக்கு மானிப்பாய் வீதி, தாவடியிலுள்ள ஸ்ரீ இராமகிருஷ்ண சமிதி மண்டபத்தில் இவ் வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

இவ் வகுப்புக்களில் ஆண்கள்,பெண்கள், சிறுவர்கள் என வயது வேறுபாடின்றி யாவரும் பங்குகொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ)

## இணையத்தளம் ஆரம்பம்

மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயத்தில் இன்று வெள்ளிக்கிழமை 9 மணிக்கு இணையத்தளம் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

பாடசாலையின் பழைய மாணவரும் சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் ஓய்வு பெற்ற பிரதிஅதிபருமான அ.அருணாசலம் இணையத்தளத்தை ஆரம்பித்து வைக்கவுள்ளார். இணையத்தள முகவரி www. veerasingam, sch.lk. (ஓ-9-29)

## மதிப்பீட்டுப் பரீட்சை

யாழ்.கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் தரம் 11 மாணவர்களுக்கான மதிப்பீட்டுப் பரீட்சை IV இன்று வெள்ளிக்கிழமை நடைபெறுகின்றது.

இப் பரீட்சை வினாத்தாள்களை இன்று காலை வலயக் கல்வி அலுவலக அபிவிருத்திப் பிரிவில் வந்து பெற்றுக்கொள்ளுமாறு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஓ)




## சான்றிதழ் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

சிவானந்த மகரிஷி யோக நிலையத்தில் யோகாசனப் பயிற்சியைப் பூர்த்தி செய்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் எதிர்வரும் 2 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8 மணிக்கு கந்தர்மடத்தில் உள்ள ஸ்ரீமகாதேவா ஆச்சிரமம் வேதாந்த மட தியான மண்டபத்தில் நிலையத் தலைவர் எஸ். வெற்றிவேலாயுதம் தலைமையில் நடைபெறவுள்ளது.

முன் பதிவை மேற்கொண்ட தகுதி பெற்றவர்கள் தவறாது பங்குகொண்டு சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ளுமாறு நிலையச் செயலாளர் சி. சோதிமூர்த்தி கேட்டுக்கொள்கிறார். (ஓ)

## செயற்குழுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

மாவட்ட கலை கலாசாரப் பேரவையின் செயற்குழுக்கூட்டம் நாளை சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு செயற்குழு உறுப்பினர்களை தவறாது சமுகமளிக்குமாறு மேலதிக அரசாங்க அதிபர் கேட்டுக்கொள்கின்றார். (ஓ)

## நிறுவுனர் நினைவுநாளும் பரிசளிப்பு விழாவும்

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் பரிசளிப்பு விழாவும்நிறுவுனர் நினைவு நாள் மற்றும் “முகிழ்” இதழ் வெளியீட்டு விழாவும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்கு கல்லூரி அதிபர் வ.ஸ்ரீகாந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கன், வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை ஆசிரியை திருமதி கௌரி சண்முகலிங்கன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

சிறப்பு விருந்தினராக சண்டிலிப்பாய் கோட்டக்கல்வி பணிப்பாளர் சி.கந்தசாமி கலந்துகொள்வதுடன் நிறுவுநர் நினைவுப் பேருரையை யாழ்.தேசியக் கல்வியியற் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் பா.தனபாலன் ஆற்றவுள்ளார். (ஓ)

## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு பாடசாலையின் பொன்னுத்துரை அரங்கில் அதிபர் மு.விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்தறை அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா கலந்து சிறப்பிப்பதுடன், சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா, யாழ். கல்விப் பணிப்பாளர் திருமதி அருளேஸ்வரி வேதநாயகம் ஆகியோரும் கௌரவ விருந்தினராக கோப்பாய் கோட்டக்கல்விப் பணிப்பாளர் சி.சித்திரவடிவேல், நல்லூர் ஓய்வுபெற்ற கோட்டக் கல்விப் பணிப்பாளர் கே.வி.குணசேகரம் ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ஓ)

✠✠✠

(அல்வாய்)

வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியின் பரிசளிப்பு விழா நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் அதிபர் திருமதி சீதா சண்முகநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை கலந்துகொள்ளவுள்ளார்.

பரிசில்களை திருமதி ராஜலக்ஷ்மி பாலசுந்தரம்பிள்ளை வழங்கிக் கௌரவிப்பார். (ஓ-6-19)

✠✠✠

தொண்டைமானாறு வீரகத்திப் பிள்ளையார் மகாவித்தியாலய பரிசளிப்புவிழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் அதிபர் வ.கணேசமூர்த்தி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்) செ.உதயகுமார் கலந்துகொள்ளவுள்ளார்.

பரிசில்களை திருமதி நந்தினி உதயகுமார் வழங்கிக் கௌரவிப்பார். (ஓ-6-19)

# மாகாண மட்ட தொழிற்துறை கண்காட்சியில் பரிசில் பெறுவோர்

(யாழ்ப்பாணம்) .

யாழ்.மத்திய கல்லூரியில் வருடாந்த 18, 19 ஆம் திகதிகளில் நடத்தப் பெற்ற தொழிற்துறைக் கண்காட்சியில் ஒவ்வொரு துறையிலும் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களுக்கும் முறையே ரூபா 2500/- ,1500/-, 500/- ரொக்கப் பரிசில்களும் ஏனையோருக்கு சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.

பரிசில்கள் மற்றும் சான்றிதழ்களைப் பெறுவோரின விபரம் வருமாறு,

**கைப்பணிப்பொருட்கள்**

**பற்றிக் துணி மற்றும் உடை தயாரித்தல்**

ஏ.மேரி துஸ்யந்தினி (பருத்தித்துறை) 1ஆம்,3ஆம் இடங்கள் .

**பனை ,தென்னை உற்பத்திப்பொருட்கள்**

கே.சோதிராஜா (நல்லூர்) 1ஆம் இடம்

**தும்பு உற்பத்தி**

எஸ்.சுமதி (நல்லூர்) 1ஆம் இடம், ரி.ஜெகதீஸ்வரி (தெல்லிப்பழை) 2ஆம் இடம்,என் பிரதீபா (கரவெட்டி) 3ஆம் இடம், எஸ். குருநாதன் (தெல்லிப்பழை) 4ஆம் இடம், ஏ.கவிதா (கரவெட்டி) 4ஆம் இடம், கே.தர்சினி (நல்லூர்) 4ஆம் இடம்.

**பனம்பொருள் உற்பத்தி**

கே. உசாநந்தினி (சண்டிலிப்பாய்) முதலாம் இடம், வி.மேனகா(நல்லூர்) 2ஆம் இடம், பி.அனுகிரிஸ்டா (காரைநகர்) 3ஆம் இடம், எம்.மேனகா (கோப்பாய்), பி.பிரியதர்சினி (சண்டிலிப்பாய்), ஏ.லூத்செல்வி (காரைநகர்), ஆகியோர் நான்காம் இடம்.

**காகித குழு உற்பத்திப்பொருட்கள்**

கே. தேவகுமாரன் (நல்லூர்) 1 ஆம் இடம், எஸ்.சுரேந்திரன் (கோப்பாய்) 2ஆம் இடம், எம்.குணநாயகம் (நல்லூர் )3ஆம் இடம், என் .சாந்தகுமாரி(சண்டிலிப்பாய்) ஆறுதல் பரிசு

**பற்றிக் நூலால் நெய்தல்**

ஐ.விஜிதா (நல்லூர்) 1,2,3 ஆம் இடங்கள், எஸ்.சந்திரகாலா (நல்லூர்) 4ஆம் இடம்,

**பற்றிக் உடை தயாரித்தல்**

கே. உசாந்தினி (கரவெட்டி ) 1ஆம் இடம், வி.மஞ்சுளா (பருத்தித்துறை) 2ஆம் இடம், ரி. ரேணுகா (பருத்தித்துறை) 3ஆம் இடம்

**பெயின்றிங் வேலை**

எம்:தமிரா (யாழ்ப்பாணம்) 1ஆம் இடம், என்.சிவகுமார் (பருத்தித்துறை) 2ஆம் இடம், எஸ்.சிவப்பிரகாசம் (யாழ்ப்பாணம்) 3,4ஆம் இடங்கள்.

**தென்னை உற்பத்தி**

எஸ்.குருநாதன் (தெல்லிப்பழை)1,2ஆம் இடங்கள், ஐ.திவாதினி(தெல்லிப்பளை) ஆறுதல் பரிசு

**வூல் நூல் வேலைகள்**

எஸ்.நாகேஸ்வரி (சண்டிலிப்பாய்)1,2ஆம் இடங்கள், எம்.ரணித்தா(சங்கானை) 3ஆம் இடம்,எஸ்.செந்தீபா (தெல்லிப்பளை)4ஆம் இடம்.

**றேந்தை பின்னுதல்**

எஸ்.நாகேஸ்வரி (சண்டிலிப்பாய்)1,2ஆம் இடங்கள்.

**மரப்பொருட்கள் உற்பத்தி**

ஜெ.ஜெயப்பிரகாஷ் (நல்லூர்) 1ஆம் இடம், ஈ.கலைச்செல்வன் (நல்லூர்) 2ஆம் இடம், வி.பாலேந்திரன் (தெல்லிப்பழை) 4ஆம் இடம்.

**மரச் செதுக்கல் உற்பத்திகள்**

வி.பத்மநாதன்(சங்கானை) 1ஆம் இடம், பி.சுதர்சன்(சங்கானை) 2ஆம் இடம், ஈ.விக்னேஸ்வரன் (உடுவில்) 3ஆம் இடம்,

**சித்திரமும் சிலைகளும்**

ஈ.கலைச்செல்வன் (நல்லூர்) 1ஆம் இடம், வி.பாலேந்திரன் (தெல்லிப்பழை)2,3,4ஆம் இடங்கள்

**தோல் பொருட்கள் உற்பத்தி**

பி.ஜானகி (பருத்தித்துறை) 1, 2, ஆம் இடங்கள்,என் .உதயகுமார் (நல்லூர்) 3ஆம் இடம்.

**பற்றிக் நிறமூட்டல்**

எம்.தனுஜா(நல்லூர்)-1ஆம் இடம், எஸ். சிவமாலினி (யாழ்ப்பாணம்)-2ஆம் இடம், ஏ.அனிற்சபிதா(பருத்தித்துறை) - 3ஆம் இடம்

**கோயில் சம்பந்தமான பொருட்கள் உற்பத்தி**

வ.சோமேஸ்வரி (உடுவில்) 1,2,3ஆம் இடம் மற்றும் 3 ஆறுதல் பரிசில்கள்

**மட்பாண்ட உற்பத்தி**

எம்.பரமநாதன் (நல்லூர்)-1 ஆம் இடம், ரி.ரோகிணிதேவி (சங்கானை) 2ஆம் இடம், ரி.நடனமலர்(சங்கானை) 3,4 இடங்கள்.

**புல்வேலை**

கே.சோதிராஜா(நல்லூர்) 1ஆம் இடம்.

**உலோக பொருட்கள் உற்பத்தி**

ரி.கதிர்செல்வன் (நல்லூர்) 1ஆம் இடம், கே.சர்நிலா(நல்லூர்) 2ஆம் இடம், ரி. சுஜீவன் (நல்லூர்) 3ஆம் இடம்

**ஆபரணங்கள்**

வி.தனராஜ்(யாழ்ப்பாணம்) 1ஆம் இடம், ஏ.மகேஸ்வரன் (யாழ்ப்பாணம்) 2ஆம் இடம், கே.கல்பனா(தெல்லிப்பழை)3ஆம் இடம்.

(தொடரும்)

# ராகு கேது பெயர்ச்சி பலன்கள்

# 27.10.2009 முதல் 08.06.2011 வரை



## கடகம்

**புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயிலியம் முடிய**

கட்டளையிட்டால் செய்யக் காத்திருக்கும் பலபேரை கைக்குள் வைத்திருக்கும் கடக ராசி நேயர்களே!

சேவை மனப்பான்மை அதிகம் கொண்டவர்கள் நீங்கள். நினைத்ததை முடித்துக் காட்டுபவர்களின் பட்டியலில் முதலிடம் பிடிப்பீர்கள். உங்கள் வேகத்திற்கும் விவேகத்திற்கும் மற்றவர்கள் ஈடு இணையாகாது. நண்பர்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பீர்கள். மாற்றுக் கருத்துடையோரை மறு நிமிடமே மாற்றி அமைக்கும் ஆற்றல் உங்களுக்கு உண்டு.

கூட்டாளிகள் கொஞ்சம் மாறினால் வேறொரு கூட்டை உடனடியாக மாற்றிக் கொண்டுவிடுவீர்கள். பாட்டாளிகளின் பிரச்சினைகளிலிருந்து பார்லிமெண்ட் பிரச்சினை வரை உங்களுக்கு தெரியாததே கிடையாது. விதியை நினைத்து வாழாமல் மதியை உபயோகித்து மதிப்போடு வாழ கற்றுக் கொண்டவர்கள் நீங்கள். யாரை எப்படி அணுகினால் எடுத்த காரியத்தை முடிக்கலாம் என்ற கலையைக் கற்று வைத்திருப்பதால் தான் வாழ்க்கையில் உங்களுக்கு வெற்றி கிடைக்கிறது.

உங்கள் ராசிக்கு அதிபதி சந்திரன் என்பதால் வளர்ச்சியும் தளர்ச்சியும் உங்களோடு இணைந்தேயிருக்கும். ஒரு காலத்தில் உச்ச நிலையில் இருப்பீர்கள். ஒரு காலத்தில் மற்றவர்களின் உதவி கேட்டு கெஞ்சுவீர்கள். ஏற்ற இறக்கம் வாய்ந்த வாழ்க்கையைப் பெற்ற உங்களுக்கு இந்த ராகு-கேது பெயர்ச்சி எப்படிப்பட்ட மாற்றங்களைக் கொடுக்கப் போகிறது என்பதைப் பற்றிப் பார்ப்போம்.

**அஷ்டலட்சுமி யோகம் தரும் ஆறாமிடத்து ராகு!**

**அலைச்சலைக் கூட்டும் பன்னிரெண்டாமிடத்து கேது!**

இதுவரை மகர ராசியில் சஞ்சரித்து வந்த ராகுவும் கடக ராசியில் சஞ்சரித்து வந்த கேதுவும் தனது வான் வெளிப்பயணத்தில் 27.10.2009 அன்று பின்நோக்கி வந்து உங்கள் பிரச்சினைகள் தீர வழிகாட்டப் போகிறார்கள்.

ஆறாமிடத்து ராகு அஷ்டலட்சுமி யோகத்தைக் கொடுக்கும் என்று சொல்வர். அது மட்டுமல்ல குருவும் கேந்திரங்களில் குறிப்பாக ராசியைப் பார்க்கும் விதத்தில் இருந்தால் தான் அந்த அஷ்டலட்சுமி யோகம் முறையாக செயல்படும். அதே அமைப்பு இப்பொழுது கோச்சாரத்தில் இருக்கிறது. மகரத்தில் உள்ள குரு கடக ராசியைப் பார்க்கிறார். எனவே எட்டு வகை லட்சுமியின் அருளும் உங்கள் இல்லத்திற்கு வந்து சேரப் போகின்றது.

பணவரவு பெருகும். சேமிப்பு உயரும். செல்வாக்கு மேலோங்கும். தொழில் சம்பந்தமாக எடுத்த முயற்சிகளில் தொடர்ந்து வெற்றி கிடைக்கும். ஒரு சிலர் பழைய தொழிலை மூடிவிட்டு புதிய தொழில் தொடங்க முயற்சிப்பர். அந்த முயற்சியும் கை கூடும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் பல வருடங்களாக பதவி உயர்வு கிடைக்காமல் ஏக்க பெருமூச்சு விட்டவர்கள் எல்லாம் இப் பொழுது ஆச்சரியப்படும் விதத்தில் பதவி உயர்வு காணப்போகிறார்கள்.

உயர் அதிகாரிகளின் தொல்லைகளை தாக்கு பிடிக்க முடியவில்லையே என்று கவலைப்பட்டவர்களுக்கு விடிவு காலம் பிறந்து விட்டது. மேலதிகாரிகள் கூட மாற்றலாகிச் செல்வர். உங்களுக்குரிய வேலை உறுதியாகும்.

ஆசைப்பட்ட பொருட்களை அடையும் நேரமிது. ஓசைப்படாமலேயே ஓராயிரம் பணிகளைச் செய்யப்போகிறீர்கள். உங்கள் சுய ஜாதகத்தில் ராகு-கேதுக்கள் இருக்கும் நிலையறிந்தும் அதன் பாதசாரபலம் அறிந்தும் அதைப் பார்க்கும் கிரகத்தின் நிலையறிந்தும் அதற்குரிய யோகபலம் பெற்ற நாளில் உங்கள் ராசிக்கு உடனடிப் பலன் தரும் ஆலயங்களைத் தேர்ந்தெடுத்து முறையாக சர்ப்ப சாந்திப் பரிகாரங்களைச் செய்து கொள்வது நல்லது.

பன்னிரெண்டாமிடத்து கேதுவால் பல வித விரயங்கள் வந்து சேரலாம். குறிப்பாக வரும் விரயங்களை சுப விரயங்களாக மாற்றிக் கொள்வது உங்கள் புத்திசாலித்தனமாகும்.

மனைவி மக்களுக்கு வேண்டிய அளவு ஆடை ஆபரணங்களை வாங்கிக் கொடுக்கலாம். மண்டபங்கள் கட்டி வாடகைக்கு விடலாம். பிள்ளைகளின் கல்யாண முயற்சிக்கு கைகொடுத்து உதவ முன் வருவீர்கள்.

பழைய வீட்டை புதுப்பித்து புதிய வீடாக்கும் பணி வெற்றி தரும். நாகரீக முறையில் நல்ல அமைப்பில் வீடு கட்ட வேண்டுமென்ற ஆசையை நிறைவேற்றிக் கொள்வீர்கள். உறவினர்களின் இல்லத்தில் நடைபெறும் சுப காரிய நிகழ்ச்சிகளுக்கு கொடுத்துதவீர்கள். வெளிநாட்டு பயணம் விரும்பும் விதத்தில் கைகூடும்.

ஒக்டோபர் 27 என்பது ஒரு அற்புதமான பலன்களை வழங்கத் தொடங்கும் நாள் அஷ்டலட்சுமி யோகம் செயல்படும் இந்த நேரத்தில் எதிர்ப்புகள் குறையும், ஏமாற்றங்கள் விலகும், இடையூறுகள் அகலும், ரண சிகிச்சை செய்தால் தான் குணமாகும் என்று உடல் நிலையைப் பார்த்து மருத்துவர்கள் சொல்லியிருக்கலாம். ஆனால் இனி சாதாரண சிகிச்சையிலேயே குணமாகும் என்று அவர்கள் சொல்வர்.

இதுவரை உங்களுக்கு பகை பாராட்டியவர்கள் குணம் மாறுவர். பங்காளி விரோதங்களை வளர்த்துக் கொள்ளாமல் இருப்பது நல்லது. எத்தனை பெரிய எதிர்ப்புகள் வந்தாலும் உங்கள் கவர்ச்சிகரமான பேச்சு அவர்கள் மனதை மாற்றி விடும்.

ஏழரைச்சனி விலகி இனிய பலன் தரும் இந்த நேரத்தில் எழில் இருந்த ராகுவும் ஆறுக்கு வருவதால் வாழ்வில் வளர்ச்சி மீது வளர்ச்சி கூடும். வருமானமும் திருப்தி தரும். பொது நிலத்தில் அக்கறை கொண்டவர்களுக்கு புதிய பொறுப்புகளும் பதவிகளும் வந்து சேரும்.

இதுவரை தலைவர்கள் தங்களை கவனிக்க வில்லையே என்று ஆதங்கப்பட்ட தொண்டர்கள் இப்பொழுது பொறுப்புகள் தானே தேடி வருவது கண்டு ஆச்சரியப்படுவர். மக்கள் மத்தியில் செல்வாக்கு உயரும்.

மணிக்கணக்காக உழைத்து முடிக்க வேண் டிய செயலை ஒரு நிமிடத்தில் முடித்துக் கொடுத்து சம்பாதித்து விடுவீர்கள் புதிய யுக்திகளைக் கையாண்டு பொன்னான வாய்ப்புகளை வரவழைத்துக்கொடுக்க ராகு உங்களுக்கு உறுதுணையாக இருக்கும்.

அதேசமயத்தில் புனர்பூச நட்சத்திர காலில் வியாழ சாரத்தில் கேது சஞ்சரிக்க தொடங்குகிறார். 26.05.2010 வரை குரு காலில் தான் கேது சஞ்சரிக்கிறார். பாம்பு கிரகங்கள் நிற்கும் வீட்டைப் பொறுத்தும் பாதசாரத்தைப் பொறுத்தும் பலன் கொடுக்கும் என்பதால் அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது 3,12க்கு அதிபதியான புதன் வீட்டில் கேது சஞ்சரிக்கிறார் என்பதால் சகோதர வழியில் விரயங்களை உருவாக்கும். விலகிச் சென்ற சகோதரர்கள் விரும்பி வந்து சேருவர்.

பூர்வீக சொத்துக்களில் ஏற்பட்ட பஞ்சாயத்துக்கள் நல்ல முடிவிற்கு வரும் பாகப் பிரிவினை நடைபெறும் பொழுது நீங்கள் விரும்பிய பகுதியை எடுத்துக்கொள்ளுங்கள் மீதியை நாங்கள் எடுத்துக்கொள்கிறோம் என்ற உடன்பிறப்புகளே உறுதிமொழி கூறுவர்.

அதே நேரத்தில் 6 மற்றும் 9ஆம் இடங்களுக்கு அதிபதியான குருவின் காலில் அல்லவா? கேது சஞ்சரிக்கிறார். எனவே தந்தையின் உடல் நலத்தில் திடீர் தாக்குதல்கள் ஏற்படலாம். எந்த விதத்திலேனும் பெரிய பாதிப்புகள் ஏற்பட்டு அகலும் என்பதால் முன்னெச்சரிக்கையோடு செயல்படுவது நல்லது. மருத்துவ ஆலோசனைகளை அடிக்கடி கேட்டு நோய் வருமுன் காப்போம் என்ற திட்டத்தைச் செயல்படுத்துங்கள்.

30.09.2010 முதல் 8.6.2011 வரை மூல நட்சத்திரத்தில் கேது காலில் ராகு சஞ்சரிக்கிறார். அதே நேரத்தில் 5, 10க்கு அதிபதியான செவ்வாயின் காலில் கேது சஞ்சரிக்கத் தொடங்குகிறார். அதன் விளைவாக நல்ல பலன்கள் உங்கள் இல்லம் தேடி வரப்போகிறது. சொத்துக்களின் சேர்க்கையும் சுகயோகங்களும் வந்து சேரும்.

வியாபாரப் போட்டிகள் அகலும் விரும்பிய நேரத்தில் விரும்பிய காரியங்களைச் செய்து முடிப்பீர்கள் வில்லங்கங்கள் அகலும் தொழில் வளர்ச்சி கூடும் கிளைத் தொழில் தொடங்கும் வாய்ப்புக்கூட ஒரு சிலருக்கு உருவாகும் பிள்ளைகளின் திருமண நிகழ்ச்சிகளை முன் நின்று சிறப்பாக நடத்தி முடிப்பீர்கள்.

29.12.2009 முதல் 29.09.2010 வரை பூராட நட்சத்திரத்தில் சுக்ரனின் சாரத்தில் ராகு சஞ்சரிக்கிறார் இதன் விளைவாக எதிர்பாராத சில மாற்றங்களைச் சந்திக்க நேரிடலாம். மனக்கசப்பு தரும் அந்த மாற்றங்கள் மன மகிழ்ச்சியை வழங்க வழிபாடுகள் தான் உங்களுக்கு உறுதுணையாக இருக்கும். எந்த தெய்வத்தை எந்த நேரத்தில் சென்று வழிபட்டால் பலன் கொடுக்குமோ அந்த தெய்வத்தை அந்த நேரத்தில் சென்று வழி பட வழி காட்டுவது ஜாதகம் தான்.

இக்காலத்தில் விரயங்கள் கூடும். தொழிலில் விழிப்புணர்ச்சி தேவை. கூட்டாளிகள் உங்களுக்கு வரும் லாபத்தை கொடுப்பதில் தகராறுகள் உருவாகாமல் பார்த்துக்கொள் வது நல்லது. அலைச்சல் அதிகரிக்கும் அதேசமயத்தில் புனர்பூச நட்சத்திரத்தில் வியாழன் காலில் கேது சஞ்சரிக்கிறார். மே 2010க்கு மேல் திருவாதிரை நட்சத்திரத்தில் ராகு காலில் கேது சஞ்சரிக்கிறார். ஒன்றுக் கொன்று எதிர் துருவமாக விளங்கும் ராகு காலில் கேதுவோ கேது காலில் ராகுவோ சஞ்சரித்தால் நினைக்க இயலாத மாற்றங்களைச் சந்திக்க நேரிடும். கடித அனுகூலம் உண்டு. காவல்துறையினரால் ஏற்பட்ட கலக்கம் மாறும். இழந்த பதவிகளை மீண்டும் பெறுவீர்கள்.

6ஆம் இடத்தில் உள்ள ராகு அதிர்ஷ்டத்தை அள்ளி வழங்கவும் பன்னிரெண்டாம் இடத்தில் உள்ள கேது பயணத்தால் நன்மைகளை வழங்கவும் திங்கட்கிழமை தோறும் முத்துக்குமாரனை வழிபட்டு வாருங்கள்.

உங்கள் ஜாதகத்தில் ராகு -கேதுக்களின் சார பலமறிந்து சர்ப்பசாந்திகளைச் செய்து கொள்வதோடு வைரவர் வடிவுடையம்மன் வளரொளி நாதரை வழிபட்டு நவக்கிரகத்தில் வீற்றிருந்து அருள் வழங்கும் ராகு கேதுக்களையும் வழிபட்டு வாருங்கள் சோகங்கள் விலகும் சுகங்கள் கூடும். (தொடரும்)

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**

---

### இலங்கையிலிருந்து 67 பவுண்

# தங்கம் கடத்திச் சென்ற இருவர் சென்னை விமான நிலையத்தில் கைது

கொழும்பில் இருந்து சென்னைக்கு கடத்தி வரப்பட்ட 67 பவுண் தங்க நகைகளை சுங்க இலாகா அதிகாரிகள் பறிமுதல் செய்தனர். இது தொடர்பாக இலங்கை பெண் உட்பட 2 பேரிடம் விசாரணை நடத்தி வருகின்றனர்.

சென்னை மீனம் பாக்கம் விமான நிலையத்திற்கு இலங்கை தலைநகர் கொழும்பில் இருந்து ஒரு விமானம் வந்தது. இதில் வந்தவர்களை விமான நிலைய சுங்க இலாகா அதிகாரிகள் கண்காணித்தனர்.

அப்போது இலங்கை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சுந்தரம் (வயது 37) என்பவரிடம் சந்தேகத்தின் பேரில் சுங்க இலாகா அதிகாரிகள் விசாரணை நடத்தினார்கள்.

அப்போது சுந்தரம் அதிகாரிகளிடம் முன்னுக்கு பின் முரணாக பேசினார். இதையடுத்து அவரிடம் இருந்த சூட்கேசை அதிகாரிகள் சோதனை போட்ட போது எதுவும் இல்லை. சுந்தரத்திடம் அதிகாரிகள் விசாரணை நடத்தியபோது கழுத்தில் புத்தம் புதிய 40 பவுண் எடை கொண்ட தங்கச் சங்கிலி அணிந்து இருந்தார். இது பற்றி கேட்டபோது சுற்றுலாவாக சென்னைக்கு வந்தேன் இந்த சங்கிலியை கழுத்தில் அணிந்து கொண்டு விமான நிலையத்தில் உள்ள ஒரு நபரிடம் கொடுத்தால் பணம் தருவதாகக் கூறினார்கள்.

இதனால் எடுத்து வந்தேன் என்றார். மேலும் அதே விமானத்தில் வந்த இலங்கை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தர்ஷினி (35) என்ற பெண் கைகளில் அதிகமான வளையல்களை அணிந்து வந்திருந்தார். சுமார் 27 பவுண் தங்க வளையல்களை இவர் கடத்தி வந்ததை சுங்க இலாகா அதிகாரிகள் கண்டு பிடித்தனர்.

இதையடுத்து மொத்தம் 67 பவுண் மதிப்புள்ள சங்கிலி, வளையல் ஆகியவற்றை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர். இவற்றின் மதிப்பு ரூ.8 இலட்சம் ஆகும்.

இது பற்றி இலங்கை பெண் தர்ஷினி, சுந்தரம் ஆகியோரிடம் சுங்க இலாகா அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்.

(ஓ-6)

---

# மீள் குடியமர்த்தப்பட்ட மக்களுக்கு வாழ்வாதாரத்திற்கான ஊக்குவிப்புத்தொகை

### ஐ.நா. அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயம் வழங்குகிறது

(கொழும்பு)

நலன்புரி நிலையங்களிலிருந்து மீள் குடியமர்த்தப்பட்ட பொது மக்களிற்கு ஐக் கிய நாடுகளின் அகதிகளிற்கான உயர்ஸ் தானிகராலயம் வாழ்வாதார மேம்பாட்டிற்காக ஊக்குவிப்புத் தொகையை வழங்கி வருகிறது.

இதன் மூலம் செல்ரகிரான்ஸ் எனும் முறையில் 25 ஆயிரம் ரூபா ஊக்குவிப்புத் தொகையாக வழங்கப்படுகிறது.

இந்தத் தொகை அரச கூட்டமைப்பின் மூலம் இடம்பெயர்ந்தவர்கள் பெற்றுக் கொள்ள முடியும்.

முதல் கட்டமாக சொந்த மாவட்டங்களிற்கு அழைத்துச் செல்லப்படுபவர்களிற்கு 5000 ரூபா ரொக்கப்பணம் வழங்கப்படுகிறது. மிகுதித் தொகையான 20 ஆயிரம் ரூபா சொந்தக் கிராமங்களிற்குச் செல்லும் பொழுது வழங்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை தற்போது வரை 45 ஆயிரத்து 30 பேர் சொந்த மாவட்டங்களிற்கு அனுப்பப்பட்டுள்ளனர். ஒரு இலட்சத்து 96 ஆயிரத்து 88 பேர் தற்போது வவுனியா நலன்புரி முகாம்களில் உள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-6-14)

# கணனிக்கு புதியவரா நீங்கள்!

## பைல்களை உருவாக்கிப் பாதுகாப்பது எப்படி?

கணனியை இப்போதுதான் பயன்படுத்தத் தொடங்கி உள்ளீர்களா? அப்படியானால் நீங்கள் முதலில் கற்றுக்கொள்ள வேண்டியது அதில் எப்படி பைல்களை உருவாக்கி, சேவ் செய்வது என்பது தான்.

கணனியில் பதிந்து வைக்கப்படும் ஒவ்வொன்றும், அது டொகுமெண்ட் எனப்படும் ஆவணம், படம், பாட்டு, விளையாட்டு இப்படி எதுவாக இருந்தாலும், அது ஒரு பைலாக சேமிக்கப்பட்டு பதியப்படுகிறது.

ஒரு குறிப்பிட்ட பைலை அதற்கான புரோகிராம் தான் திறந்து காட்ட முடியும். எடுத்துக் காட்டாக டொகுமெண்ட் பைல் ஒன்றை படத்திற்கான கிராபிக்ஸ் புரோகிராம் திறந்து படிக்க இயலாது.

மியூசிக் புரோகிராம் ஒன்றினால் டொகுமெண்ட் பைல் ஒன்றைத் திறந்து பார்க்க முடியாது. ஒவ்வொரு புரோகிராமிற்கும் அது எந்த பைலைத் திறந்து இயக்க முடியும் என்பது புரோகிராமிங் செய்யப்பட்டு அறிந்துகொள்ளும் வகையில் காட்டப்பட்டிருக்கும். அதாவது ஒவ்வொரு பைலும் குறிப்பிட்ட பைல் டைப் வகையினைச் சேர்ந்தது என்பதனை அறிந்து கொள்ளலாம்.

இதனை அறியும் இடம் அந்தப் பைலின் பெயரை அடுத்து உள்ள முற்றுப் புள்ளியைக் கடந்து எழுதப்படும் எண்கள் அல்லது எழுத்துக்களைக் கொண்ட இடம் தான். எடுத்துக்காட்டாக 'myletter.doc' என்பது ஒரு பைலின் பெயர். இதில் முதலில் உள்ள myletter என்பது பைலின் பெயர் doc என்பது அந்த பைல் எத்தகையது என்பதனைக் கூறும் பெயர்.

இதன்பொருள் என்னவென்றால் இந்த பைலைத் திறக்க doc என்பதைப் புரிந்து கொள்ளும் மைக்ரோசொப்ட் வேர்ட் போன்ற புரோகிராம் வேண்டும் என்பதே. புரோகிராம் என்று எடுத்துக்கொண்டால் அதில் பல வகையான பைல்கள் அடங்கியிருக்கலாம்.

இன்றைய கணனிகளில் ஆயிரக்கணக்கான பைல்கள் கணனியில் ஹார்ட் டிஸ்க்கில் பல இடங்களில் பரவி பதியப்பட்டுக் கிடக்கின்றன. இவ்வாறு பரவிக் கிடக்கும் பைல்களை ஒழுங்குபடுத்த போல்டர்கள் (Folders) உதவுகின்றன.

எனவே புரோகிராம் ஒன்றின் அனைத்துப் பைல்களும் ஒரு போல்டரில் இருந்தால் அவற்றை அடையாளம் காண்பது எளிது. போல்டர் ஒன்றின் உள்ளே மேலும் பைல்கள் அடங்கிய துணை போல்டர்கள் ('subfolders') இருக்கலாம். எடுத்துக்காட்டாக உங்கள் நிறுவனம் அல்லது அலுவலகம் சார்ந்த பைல்களை Office என்னும் போல்டரில் வைத்திருக்கலாம். இதன் உள்ளே அலுவலர்கள், ஊதியம், போனஸ் என்பது போன்ற பல துணை போல்டர்கள் இருக்கலாம்.

போல்டர் ஒன்றை நீங்களே உருவாக்கலாம்; குறிப்பிட்ட போல்டர்களை எளிதாகக் கண்டறிய ஷோர்ட் கட் வழிகளையும் நீங்களே உருவாக்கலாம். இதற்கு எடுத்துக் காட்டாக ஒன்றைப் பார்க்கலாம்.



உங்கள் டெஸ்க் டாப்பில் (My Documents) என்ற ஷோர்ட் கட் உடன் கூடிய ஐகன் இருக்கும். இதன் மீது மவுஸைக் கொண்டு இருமுறை கிளிக் செய்தால் My Documents என்னும் போல்டரில் உள்ள மற்ற போல்டர்களையும் பைல்களையும் காணலாம். My Documents என்பது உங்களுக்காகத் தானாக உருவாக்கப்பட்ட பெரிய போல்டராகும்.

நீங்கள் உருவாக்கும் அனைத்துப் பைல்களையும் பிரித்துப் பல குழுக்களாக வைத்திட மை டொகுமெண்ட்ஸ் உதவுகிறது. எடுத்துக்காட்டாக மை டொகுமெண்ட்ஸ் போல்டரிலேயே மைமியூசிக், மை பிக்சர்ஸ், மை வீடியோஸ் போன்ற சப் போல்டர்கள் நம் தேவைக்காகவே உள்ளன.

ஆனால் நாம் உருவாக்கும் பைல்களைக் கட்டாயம் இதில் தான் சேமித்து வைக்க வேண்டியதில்லை. எந்தப் போல்டரில் வேண்டுமானாலும் போட்டு வைக்கலாம். பைல்களை எளிதில் பின்னர் தேடும் வகையில் போல்டர்களை உருவாக்கி அவற்றை எளிதாக அடையாளம் காணும் வகையில் பெயர் கொடுத்து வைக்கலாம். அதேபோல் தேவையற்ற போல்டர்களை அழித்துவிடவும் வேண்டும். இல்லை எனில் பைல்களே இல்லாத போல்டர்கள் இடத்தை அடைத்துக் கொண்டிருக்கும்.

பைல்களைத் தேடும் வழிகள் கணனியில் பைல்களைப் பல வழிகளில் தேடலாம். பலர் தங்கள் பைல்கள் எங்கிருக்கின்றன என அறியவும் அவற்றைத் திறக்கவும் மை கொம்ப்யூட்டர் ஐகனைப் பயன்படுத்துகின் றனர்.

டெஸ்க்டொப்பில் இந்த ஐகன் மீது கிளிக் செய்தால் பைல்கள் பாதுகாத்து பதியப்பட்டு இருக்கும் பல்வேறு இடங்கள் காட்டப்படும். இதில் 'C' டிரைவ் மீது கிளிக் செய்தால் உங்கள் ஹார்ட் டிஸ்க்கில் உள்ள அனைத்துப் பைல்களும் அல்லது அவை இருக்கும் போல்டர்களும் காட்டப்படும்.

வேறு எக்ஸ்ட்ரா டிரைவ் இல்லை என்றால் இதில் மட்டுமே பைல்களும் போல்டர்களும் இருக்கும். ஆனால் 'C' தவிர 'D', 'E', 'F' என டிரைவ்கள் இருப்பின் அந்த எழுத்துக்கள் மீது கிளிக் செய்து அந்த டிரைவில் உள்ள போல்டர்களையும் பைல்களையும் காணலாம்.




'C' டிரைவில் அனைத்துப் போல்டர்களும் காட்டப்பட்டாலும் ஒரு சில போல்டர்கள் நீங்கள் திறந்து பார்க்கக்கூடாத போல்டர்களாக இருக்கும். இவற்றை நீங்கள் திறக்க முயற்சிக்கையில் இந்தப் பைல்கள் இயக்கத்திற்கு ஆதாரமானவை. எனவே திறக்கமுயற்சிப்பது சிக்கலை உண்டாக்கும் என்பது போன்ற எச்சரிக்கை செய்திகள் காட்டப்பட்டு அந்தப் போல்டர்கள் திறக்கப்படும்.

பொதுவாக இது போன்ற எச்சரிக்கை செய்திகள் வந்த பின்னர் திறக்கப்படும் போல்டர்களில் உள்ள பைல்களை எடிட் செய்திடக்கூடாது; அழிக்கவும் கூடாது. இவற்றில் புரோகிராம் பைல்கள் மற்றும் சிஸ்டம் பைல்கள் அடங்கிய போல்டர்களும் விண்டோஸ் போல்டர்களும் இருக்கும். இவை கணனியில் இயக்கத்திற்கு மிக முக்கியமானவை. இவற்றை திறப்பதுவும் திருத்துவதும் கூடாது. விண்டோஸ் மற்றும் அப்ளிகேஷன் புரோகிராம்கள் இயங்க, இவை அப்படியே பதிந்த நிலையில் இருப்பது அவசியம்.

பைல்களையும் போல்டர்களையும் காட்டும் விண்டோஸ் எக்ஸ்புளோரரைத் திறக்க விண்டோஸ் (Windows+E) கீகளை அழுத்தலாம். அல்லது Start பட்டனில் ரைட் கிளிக்செய்து அதில் மேல் எழும் மெனுவில் இரண்டாவதாக உள்ள பிரிவில் கிளிக் செய்யலாம்.

எல்லா பைல்களும் டிஸ்க் ஸ்பேஸ் எடுத்துக் கொள்கின்றன.

நாம் ஹார்ட் டிஸ்க்கில் தானே எழுதுகிறோம்.

எனவே எந்த அளவு இடத்தை இவை எடுத்துக்கொள்கின்றன என்று தெரிந்து கொள்வது நல்லதுதானே. எவ்வளவு ஹார்ட் டிஸ்க் ஸ்பேஸை தற்போது உள்ள பைல்கள் எடுத்துக் கொண்டிருக்கின்றன? இன்னும் எவ்வளவு இடம் உள்ளது? என்று அறிந்துகொள்ள மை கொம்ப்யூட்டரை டபிள் கிளிக் செய்தபின் டிரைவிற்கான எழுத்தில் எடுத்துக்காட்டாக 'C' டபுள் கிளிக் செய்திடலாம் ரைட் கிளிக் செய்தி டுங்கள்.

இதில் கிடைக்கும் மெனுவில் கீழாக உள்ள புராபர்ட்டீஸ் என்பதில் கிளிக் செய்தால் டிஸ்க் வட்டவடிவமாகக் காட்டப்பட்டு அதில் பயன்படுத்தப்பட்ட இடமும் காலியாக உள்ள இடமும் காட்டப்படும். எவ்வளவு அளவு என்பது மேலாகக் குறிப்பிடப்பட்டிருக்கும். டிஸ்க்கில் இடம் குறைந்து அடுத்து வரும் பைல்களை எழுதுவது சிரமமாக இருக்கும் என்று எண்ணினால் உடனே தேவையற்ற பைல்களை நீக்கலாம். நீக்க வேண்டிய பைல்களை அடையாளம் கண்டு கொண்டால் அவை இருக்கும் டிரைவ் மற்றும் போல்டர் சென்று பைலின் மீது ரைட் கிளிக் செய்துவரும் மெனுவில் Delete பட்டனை அழுத்தினால் பைல் அழிக்கப்படும்.

ஆனால் அவ்வாறு அழிக்கப்படும் பைல்கள் கொம்ப்யூட்ரில் உள்ள ரீசைக்கிள் பின்னில் சென்று அமர்ந்து கொள்ளுங்கள். நீங்கள் தவறான பைலை அழித்து விட்டு பின் மீண்டும் அதனை வேண்டும் என உணர்ந்தால் அதனை மீட்பதற்காகத் தான் இந்த ஏற்பாடு. ரீசைக்கிள் பின்னுக்குச் செல்லுமுன் இந்த பைலை அழிக்க வேண்டுமா? என்ற கேள்வி கேட்கப்பட்டு பின் தான் அந்தப் பைல் அழிக்கப்படும். அப்படியே அழிந்தாலும் அது ரீ சைக்கிள் பின்னில் இருப்பதால் எப்போது வேண்டுமானாலும் பெற்றுக்கொள்ளலாம்.

ஆனால் நாம் இடம் காலியாக வேண்டும் என்று அழிக்கையில் மீண்டும் அந்த பைலை ரீ சைக்கிள் பின்னில் வைத் திட வேண்டிய அவசியமில்லை. எனவே உடனே அதை அங்கிருந்தும் அழித்து விட லாம். ரீசைக்கிள் பின் ஐகனை அழுத்தி கிடைக்கும் மெனு மூலம் பைலை அழிக்கலாம். அல்லது முதலில் பைலை அழிக்க முயற்சிக்கையிலேயே ஷிப்ட் கீ அழுத்தி டெலீட் கீ அழுத்தினால் பைல் ரீசைக்கிள் பின்னுக்குச் செல்லாமல் அழிக்கப்படும்.

ஆனால் இதனை நாம் திரும்பப் பெற முடியாது.

# உங்கள் இன்டர்நெட் உங்களுக்கு மட்டும்

*(சென்றவாரத் தொடர்ச்சி...)*

இவ்வாறு பைல்கள் குவிவதனை நீங்கள் விரும்பவில்லை என்றால் உங்கள் பிரவுசிங் முடிந்து பிரவுசரை மூடும்போது அவை அனைத்தையும் போல்டரிலிருந்து நீக்கும் படி நீங்கள் செட் செய்திடமுடியும். Internet Options விண்டோவில் Advanced என்ற டேப்பில் கிளிக் செய்திடவும்.

இதில் நிறைய ஒப்ஷன்ஸ் தரப்பட்டிருக்கும். எனவே கவனமாக இதில் ஸ்குரோல் செய்திடவேண்டும். தவறுதலாக எதனையேனும், நம்மையும் அறியாமல் தேர்ந்தெடுத்துவிட்டால், பின் பிரவுசிங் செய்திடுகையில் பிரச்சினை ஏற்படும். ஏற்கனவே பிரவுசர் இன்ஸ்டோல் செய்யப்படுகையில் சில ஒப்ஷன்ஸ் தேர்ந்தெடுக்கப்பட்ட நிலையில் இருக்கும்.

இவற்றை நீக்கிவிடாமல் வரிசையாகச் செல்ல வேண்டும். அப்படி எதனையேனும் நீக்கியதாக உணர்ந்தால், உடனே Cancel பட்டன் கிளிக் செய்து மீண்டும் இந்த விண்டோவினைத் திறந்து செலக்ட் செய்திடலாம்.



இனி இந்த லிஸ்ட்டில் ஸ்குரோல் செய்து அதில் 'Empty Temporary Internet Files Folder when browser is closed' என்ற ஒப்ஷன் உள்ள வரியினைத்தேடிக் கண்டு பிடிக்கவும். இதில் ஒருசிறிய டிக் அடையாளம் ஏற்படுத்தி பின் ஓகே கிளிச் செய்து வெளியேறவும்.

பயாபொக்ஸ் 3.5 தொகுப்பு மேலே தரப்பட்டுள்ள பல வசதிகளை மிக எளிமையாக அமைத்துக்கொள்ள வழிகளைத் தருகிறது. Tools மெனுவில் Clear Private Data என்பதைத் தேர்ந்தெடுங்கள். இதில் நீங்கள் எவற்றை எல்லாம் நீக்க வேண்டும் என விரும்புகிறீர்களோ அவற்றை எல்லாம் தேர்ந்தெடுத்து அமைக்கலாம். இதில் டெம்பரரி இன்டர்நெட் பைல்களைக் காலிசெய்திட Cache என்பதில் கிளிக் செய்திட வேண்டும்.

இங்கும் பிரவுசர் செய்திடலாம். Tools மெனுவிலிருந்து செலக்ட் செய்திடவும். இங்கு Provacy என்ற டேப் அழுத்தினால் கிடைக்கும் பாக்ஸில் அழுத்தவும்.

பின் Settings for deleting history என்ற விண்டோ கிடைக்கும். இதில் எந்த வகை டேட்டா இருக்கக்கூடாது என்று எண்ணுகிறீர்களோ அவற்றைத் தேர்ந்தெடுத்து, பின் ஓகே கொடுத்து மூடலாம்.

# இன்று ஒரு தகவல்

## யமன் கேட்ட கேள்வி

இயற்கையின் நடைமுறை உயிர்களின் விருப்பத்திற்கெல்லாம் வளைந்து கொடுக்காது என்பதை விளக்கும் ஒரு கதை இது. ஒரு சமயம் யமதர்மன் பூலோகத்திற்கு வந்தார்.

கல்யாண வீடொன்றில் நுழைந்த அவர் அங்கு யாரையோ தேடிக்கொண்டிருந்தார்.

கதவோரமாக ஓர் எலி நின்று கொண்டிருந்து அந்த எலியைப் பார்த்த யமன் 'நீ இங்கேயா இருக்கிறாய்?' என்று ஆச்சரியத்துடன் கேட்டார்.

அப்படிக் கேட்டுவிட்டு' அவர் தன் போக்கில் சென்றுவிட்டார்.

எலி யோசித்துப் பார்த்தது 'யமன் என்னைப் பார்த்து நீ இங்கேயா இருக்கிறாய்? என்று ஆச்சரியத்துடன் கேட்டு விட்டுப் போகிறாரே ! அப்படியானால் நான் இந்நேரம் யமலோகத்தில் இருக்க வேண்டிய ஆளா?' என்று நினைத்து அந்த எண்ணம் காரணமாக எலிக்கு மரணபயம் வந்துவிட்டது உடனே அது அழ ஆரம்பித்தது.

வெளியே வந்து ஒரு மரத்தடியில் உட்கார்ந்து அழுது கொண்டிருந்தது. அந்தச் சமயத்தில் ஒரு பருந்து அங்கே பறந்து வந்தது. எலியைப் பார்த்த பருந்து அதனருகில் சென்று 'ஏன் அழுகிறாய்?' என்று கேட்டது.

எலியும் யமன் தன்னைக் கேட்ட விடயத்தைச் சொல்லி அழுதது.

அதைக்கேட்ட பருந்து சிரித்துக் கொண்டே 'கவலைப்படாதே! உனக்கு ஏதாவது கெடுதல் வர வேண்டுமானால் அது என்னால் தான் வரவேண்டும். நான் உனக்கு எந்தக் கெடுதலும் செய்யமாட்டேன்' என்று நான் உனக்கு இப்போதே வாக்குறுதி தருகிறேன். தைரியமாக இரு என்று கூறியது.

'இருந்தாலும் யமன் திரும்பி வரும்போது என்னைத் தூக்கிக் கொண்டு போய் விட்டால் நான் என்ன செய்வது ?' என்று எலி கேட்டது.

'அதற்கு ஒரு வழி இருக்கிறது நீ உடனே என்னுடன் புறப்படு. நான் உன்னைத் தூக்கிக் கொண்டு போய் பத்திரமாக ஓரிடத்தில் வைத்து விடுகிறேன்' என்று பருந்து கூறியது.

'சரி' என்று எலி பருந்துடன் புறப்பட்டது. பருந்து எலியைத் தூக்கிச் சென்று ஒரு மலையுச்சியில் ஒரு பாறையின் பின்புறம் இருந்த ஒரு பொந்தில் பத்திரமாக இறக்கி விட்டது. பின்னர் பருந்து திரும்பவும் அந்தக் கல்யாண வீட்டிற்கே வந்து சேர்ந்தது.

அந்தச் சமயத்தில் யமன் வெளியே வந்து கொண்டிருந்தார். கதவோரமாக நின்ற எலியைத் தேடினார். எலி அங்கில்லை அப்போது அந்தப் பருந்து சிரித்துக் கொண்டே யமனிடம் சென்று 'நான் தான் எலியைப் பத்திரமாக எடுத்துச் சென்று மலையுச்சியின் பாறை மறைவில் வைத்திருக்கிறேன்' என்று விடயத்தைக் கூறியது.

அதைக் கேட்டதும் யமன் அப்பாடா! என்று பெருமூச்சு விட்டார்.

அதன்பின் "அதுதானே பார்த்தேன்... இன்றைக்கு இந்த நேரத்தில் அந்த எலிக்கு மலையுச்சியில் பாறை மறைவில் இருக்கும் ஒரு பூனையால் மரணம் ஏற்பட வேண்டும். அப்படியிருக்கும் போது அந்த எலி இங்கிருக்கிறதே என்று பார்த்தேன். அதனால் தான் "நீ இங்கேயா இருக்கிறாய்?" என்று எலியிடம் கேட்டேன். இந்நேரம் அங்கே அதன் கதை முடிந்திருக்கும்" என்றார்.

இதிலிருந்து நாம் புரிந்து கொள்ள வேண்டியது என்ன? இயற்கையின் கணக்கு எப்போதும் சரியாகவே முடியும் என்பது தான்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# நீதி மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சினால் எதிர்வரும் 7, 8ஆம் திகதிகளில் நடமாடும் சேவை

## வடமராட்சியில் நடத்தப்படும்

(கொழும்பு)

நீதி மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சின் கீழ் செயற்படும் சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை மீள் கட்டியெழுப்புவதற்கான செயற்திட்டத்தினால் நடமாடும் சேவை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதில் பருத்தித்துறை பிரதேச செயலகத்திற்கான நடமாடும் சேவை எதிர்வரும் 7 ஆம் திகதி சனிக்கிழமை வேலாயுதம் மகா வித்தியாலயத்திலும் கரவெட்டி பிரதேச செயலகத்திற்கான நடமாடும் சேவை 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நெல்லியடி மகா வித்தியாலயத்திலும் நடைபெறவுள்ளது.

இந் நடமாடும் சேவையில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களிலுள்ள காணிப்பிரச்சினை இன்னும் தீர்க்கப்படாமல் காணப்படும் நட்ட ஈடு, நிவாரணம், வீடமைப்பு போன்ற பிரச்சினைகளுக்கான ஆலோசனைகள் வழங்கப்படுவதோடு தொடர்ந்து சுனாமியால் ஆவணங்களை இழந்த மக்களுக்கு தேசிய அடையாள அட்டை, பிறப்பு, இறப்பு அத்தாட்சிப் பத்திரம், பதிவுத் திருமணங்களை மேற்கொண்டு அது தொடர்பான ஆவணங்களை பெற்றுக் கொடுப்பதற்கான சகல ஏற்பாடுகளையும் கொண்டுள்ளது.

மேலும் சுனாமியால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள், பெண்கள் தொடர்பான முறைப்பாடுகளையும் இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பான முறைப்பாடுகள் மற்றும் மனித உரிமை மீறல் தொடர்பான முறைப்பாடுகளும் பெற்றுக் கொள்ளப்பட்டு அது தொடர்பான உரிய நடவடிக்கைகள் எடுப்பதற்கான ஏற்பாடுகளையும் கொண்டுள்ளது.

மேலும் சுனாமி விசேட மத்தியஸ்த சபையினால் தீர்த்துக் கொள்ளப்பட கூடிய பிணக்குகளையும் ஆற்றுப்படுத்த முடியும்.

இந் நடமாடும் சேவையில் நீதி அமைச்சின் செயலாளர் மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் பிரதிநிதிகள் பலரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இச் சேவைகளை வழங்குவதற்காக மகளிர் மற்றும் சமூக சேவைகள் அமைச்சு, நீதி மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சு, இலஞ்சம் அல்லது ஊழல் தொடர்பான சார்த்துதல்களை விசாரணை செய்வதற்கான ஆணைக்குழு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, மாகாண காணிகள் ஆணைக்குழு, பொதுச் சேவைகள் ஆணைக்குழு, தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை, சுனாமி விஷேட மத்தியஸ்த சபை, மீன்பிடித் திணைக்களம், பதிவாளர் நாயகம் திணைக்களம், மாவட்ட செயலகம், பிரதேச செயலகம் ஆகியன இணைந்து செயற்படவுள்ளன. (6-9)

# உலக ஈரநில தினத்தை முன்னிட்டு மாணவர்களுக்கான ஓவியப்போட்டி

வடமாகாண மத்திய சுற்றாடல் அதிகார சபை, பாடசாலை மாணவர்களுக்கான ஓவியப்போட்டியொன்றை நடத்தவுள்ளது.

பெப்ரவரி மாதம் 02 ஆம் திகதி அனுஷ்டிக்கப்படும் உலக ஈரநில தினத்தை முன்னிட்டு நடத்தப்படும் இப்போட்டி கனிஷ்ட பிரிவு, சிரேஷ்ட பிரிவு என இரு பிரிவுகளில் நடைபெறும்.

கனிஷ்ட பிரிவில் தரம் 6 தொடக்கம் தரம் 9 வரையுள்ள மாணவர்களும் சிரேஷ்ட பிரிவில் தரம் 10 தொடக்கம் தரம் 13 வரையுள்ள மாணவர்களும் பங்குபற்றலாம்.

மாவட்ட மட்டத்திலிருந்து சிறந்த 10 ஓவியங்கள் மாகாண மட்ட போட்டிக்கு தெரிவு செய்யப்படும். மாகாண மட்டத்தில் முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவர்கள் தேசிய மட்டப் போட்டிக்கு தெரிவு செய்யப்படுவர். தேசிய மட்டத்தில் முதல் மூன்று இடங்கள் மற்றும் 7 சிறந்த விருதுகளுக்குரிய ஓவியங்கள் தெரிவு செய்யப்படவுள்ளன.

தேசிய, மாகாண, மாவட்ட மட்டத்தில் வெற்றி பெறுபவர்களுக்கு பெறுமதிமிக்க பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளதுடன் இலங்கையின் தேசிய பூங்காவொன்றை பார்வையிடுவதற்காக ஒவ்வொரு வெற்றியாளர்களுக்கும் 5 நுழைவுச் சீட்டுகள் வழங்கப்படவுள்ளன.

இப்போட்டிக்கு கீழ்வரும் ஒழுங்கு விதிகளை பின்பற்றுமாறு கேட்கப்பட்டுள்ளது.

சித்திரப் போட்டிக்கு எத்தகைய வர்ண ஊடகங்களும் பயன்படுத்த்முடியும். கடதாசியின் அளவு 18"×14" ஆக அமைதல் வேண்டும்.

முழுமையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் பாடசாலை அதிபரால் உறுதி செய்யப்பட்டு ஓவியத்தின் பின்புறம் ஓட்டப்படுதல் வேண்டும். அனைத்து சித்திரங்களும் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் வடமாகாண அலுவலகத்தினூடாக அனுப்பப்படுதல்வேண்டும்.

இதற்கான விண்ணப்பங்கள் பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் இவ் விண்ணப்பங்களை மத்திய சுற்றாடல் அதிகாரசபை வடமாகாண அலுவலகத்திலும் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் மேலதிக விபரங்களுக்கு கச்சேரி வளாகத்தினுள் அமைந்துள்ள மத்திய சுற்றாடல் அலுவலகத்துடன் 021 222 4050 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு சபையின் உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஓ-6-19)

# இராசி பலன்

*30.10.2009*
*(ஐப்பசி 13 வெள்ளிக்கிழமை)*
*துவாதசி பின்னிரவு 1.32 மணிவரை*
*பூரட்டாதி மாலை 6.02 மணிவரை*
*இராகுகாலம் 10.33-12.03 மணிவரை*
*சுபநேரம் 6.03-7.33 மணிவரை*
*உலக சிக்கன நாள்*
*இரண்டாம் ஐப்பசி வெள்ளி.*

| | |
|---|---|
| மேடம் | சோம்பல் நிலை, காரிய அலைச்சல், சுபசெலவு, தெய்வ சிந்தை. |
| இடபம் | தனதானிய சேர்க்கை, நண்பர்கள் சந்திப்பு, குடும்ப சுகம், காரிய அனுகூலம். |
| மிதுனம் | காரிய அனுகூலம், தெய்வ தரிசனம், பிறர் உதவி, உற்சாகம். |
| கடகம் | உத்தியோக பங்கம், பயந்த சுபாவம், பிரயாணம், புதிய முயற்சி. |
| சிங்கம் | மரியாதைக் குறைவு, முழங்கால் வலி, போசன சுகம், முயற்சி தாமதம். |
| கன்னி | மனோ தைரியம், குடும்ப நன்மை, முயற்சி கைகூடும், கீர்த்தி. |
| துலாம் | தெய்வ தரிசனம், சத்துரு ஜெயம், தடைப்பட்ட காரியம் கைகூடும், மனமகிழ்ச்சி. |
| விருச்சிகம் | அஜீரண ரோகம், காரிய இடையூறு, கௌரவக் குறைவு, தன விரயம். |
| தனுசு | தன்னம்பிக்கைக் குறைவு, தெய்வ சிந்தை, உறவினர் சந்திப்பு, சுப செலவு. |
| மகரம் | நற்கீர்த்தி, காரிய அனுகூலம், பொருள் சேர்க்கை, விருந்துபசாரம். |
| கும்பம் | போசன சுகக்குறைவு, காரிய தாமதம், அதிக செலவு, பித்த ரோகம். |
| மீனம் | வெகுமானம், தெய்வ தரிசனம், போசன சுகம், மாதர் நட்பு. |


வளவன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 70 | 85 |
| உருளைக்கிழங்கு | 80 | 100 | 95 |
| பச்சைமிளகாய் | 60 | 70 | 40 |
| தக்காளி | 40 | 60 | 55 |
| மரவள்ளிக்கிழங்கு | 25 | 40 | 30 |
| கோவா | 50 | 60 | 60 |
| கரட் | 50 | 70 | 65 |
| பூசணி | 40 | 50 | 30 |
| புடோல் | 20 | 40 | 30 |
| வாழைக்காய் | 30 | 40 | 45 |
| சின்ன வெங்காயம் | 70 | 80 | 70 |
| பெரிய வெங்காயம் | 90 | 90 | 80 |
| பாகற்காய் | 90 | 120 | 100 |
| வெண்டிக்காய் | 30 | 40 | 40 |
| கரணைக் கிழங்கு | 25 | 40 | 60 |
| பயிற்றங்காய் | 50 | 70 | 50 |
| லீக்ஸ் | 110 | 140 | 120 |
| பீற்றூட் | 40 | 50 | 40 |
| கறிமிளகாய் | 70 | 80 | 80 |
| முருங்கைக்காய் | 180 | 220 | 120 |
| கீரை – 1 பிடி | 10 | 20 | 20 |
| தேசிக்காய் | 180 | 200 | 280 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 40 | 35 |

# பெஷாவர் நகரில் கார் குண்டு வெடிப்பு 90 பேர் பலி 200 பேர் வரை காயம்

## தலிபான்களே காரணம் என்கிறது பாகிஸ்தான் அரசு



பாகிஸ்தானின் வட மேற்கே பெஷாவார் நகரில் உள்ள சனநெருக்கடி மிக்க சந்தை ஒன்றில் பாரிய கார் குண்டு ஒன்று வெடித்துள்ளது. இந்தத் தாக்குதலில் 90 க்கும் அதிகமானோர் கொல்லப்பட்டதுடன் 200 பேர் வரை காயமடைந்திருக்கிறார்கள்.

பாதிக்கப்பட்டவர்களில் பெரும்பாலானோர் பெண்களும் குழந்தைகளும் ஆவர்.

ஒருபள்ளிவாசல் உட்பட பல கட்டிடங் களை நிர்மூலம் செய்த இந்தக் குண்டு வெடிப்பில் மேலும் பல கட்டிடங்கள் எரிந்து போயின.

கொல்லப்பட்டவர்களின் சடலங்களையும் காயமடைந்தவர்களையும் இடிபாடுக ளில் இருந்து மீட்கும் பணியில் மீட்புப் பணியாளர்கள் ஈடுபட்டுள்ளனர். இந்தத் தாக் குதலில் தமக்கு தொடர்பில்லை என்று தலி பான்கள் கூறியுள்ளனர்.

ஆனால் ஆப்கான் எல்லையில் தீவிரவாதிகளின் பலமான பகுதிகள் மீது மேற்கொள்ளப்படும் இராணுவ நடவடிக்கைக்குப் பதிலடியாக நடத்தப்படுவதாக கூறப்படும் தொடர்ச்சியான குண்டுத்தாக்குதல்களுக்கு தலிபான்களே காரணம் என்று பாகிஸ்தான் அரசாங்கம் குற்றஞ்சாட்டுகிறது. (ஓ-6)

# சர்வதேச மொழிகள் சிலவற்றிலும் இணையத்தள முகவரிகள் அமைக்க திட்டம்

இணையத்தில் ஆங்கில எழுத்துகள் அல்லாமல் ஏனைய சில மொழி எழுத்துகளைக் கொண்டும் இணையத்தள முகவரிகள் வைத்துக் கொள்ள வழிசெய்வது பற்றிய திட்டத்தை ஜகேன் (ICANN) நிறுவனம் முடிபு செய்து வருகிறது.

இணையத்தை ஒழுங்கு செய்யும் ஓர் அமைப்பு இன்ரநெட் கோர்ப்பரேஷன் ஃபார் அஸைண்ட் நேம்ஸ் அண்ட் நம்பர்ஸ் (ICANN) ஆகும்.

இன்று வெள்ளிக்கிழமை தென் கொரியாவில் நடக்கும் ஒரு கூட்டத்தில் இத்திட்டத்துக்கு ஒப்புதல் கிடைத்து விட்டால் எதிர்வரும் நவம்பர் 16 ஆம் திகதி முதல் இலத்தீன் எழுத்துக்கள் அல்லாத வேற்று மொழி எழுத்துக்களைக் கொண்ட பெயர்களுடன் இணையத் தளங்கள் உலாவரத் தொடங்கிவிடும்.

இவ்வளவு காலமும் இலத்தீன் எழுத்துக்கள் மட்டுமே இணைய முகவரிகளில் ஆதிக்கம் செலுத்தி வந்த நிலையில் அவ்வெழுத்துக்களைத் தாண்டி அரபி, சீன மொழி, ஜப்பானிய மொழி, சிரில்லிக், தமிழ் போன்றவற்றின் எழுத்துக்களைக் கொண்டும் இனி இணையதள முகவரிகளை வைத்துக் கொள்ள வழி பிறக்கும் என்று தெரிகிறது. (ஓ-6)

# தமிழக - கேரள பஞ்சாங்கங்களில் காணும் வேறுபாடு ; சபரிமலை பக்தர்கள் மாலையணியும் தினத்தில் குழப்பம்



(நாகர்கோவில்)

தமிழகத்திலும், கேரளாவிலும் கார்த்திகை மாதம் முதலாம் திகதி ஒரு நாள் இடை வெளி விட்டு வருவதால் மண்டல கால பூஜைக்காக மாலை அணியும் பக்தர்கள் ஐப்பசி மாத கடைசி நாளில் மாலை அணிய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

சபரிமலையில் கார்த்திகை மாதம் முதலாம் திகதி மண்டல காலம் ஆரம்பமாகும். அன்று முதல் 41 நாட்கள் நடக்கும் பூஜை ஒரு மண்டல காலம் எனப்படும். 41 ஆவது நாள் மண்டல பூஜை நடக்கும். கார்த்திகை மாதம் முதலாம் திகதி மாலை அணிந்தால் 41 நாட்கள் விரதம் சரியாக வரும்.

ஆனால், இந்த ஆண்டு தமிழக பஞ்சாங்கங்களில் நவம்பர் மாதம் 17 அம் திகதியும் கேரள பஞ்சாங்கங்களில் நவம்பர் மாதம் 16 ஆம் திகதியும் கார்த்திகை மாதம் பிறப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளதால் சிறு குழப்பம் ஏற்பட்டுள்ளது.

கேரள பஞ்சாங்க அடிப்படையில் மண்டல கால பூஜைக்காக சபரிமலை நடை 15 ஆம் திகதி மாலையே திறக்கப்பட்டு 16 ஆம் திகதி முதல் மண்டல கால பூஜை ஆரம்பமா கிறது. தமிழக பஞ்சாங்கப் படி விரதமிருந்தால் 40 நாட்கள் தான் விரதமிருக்க முடியும்.

குறிப்பாக முதன் முதலாக மாலையணியும் பக்தர்களுக்கு இது தர்மசங்கடமாக இருக்கும்.

எனவே மண்டல பூஜையில் முறைப்படி விரதமிருந்து கலந்து கொள்ள விரும்பும் பக்தர்கள் நவம்பர் மாதம் 16 ஆம் திகதியே மாலை அணிந்தாக வேண்டும்.

இதுகுறித்து சபரிமலை தந்திரி கண்டரரு ராஜீவரரு கூறும்போது, இதுபோல ஒருநாள் வித்தியாசம் கேரள, தமிழக பஞ்சாங்கங்களில் ஏற்படுவது வழக்கமானதுதான். மண்டல கால விரதம் என்பது 41 நாட்கள் மேற்கொள்ள வேண்டும்.

நவம். 16 ஆம் திகதி கேரளாவில் கார்த்திகை பிறக்கிறது. சபரிமலை மண்டல காலத்தை கணக்கில் கொள்பவர்கள் 16 ஆம் திகதி மாலை அணிந்து கொள்ள வேண்டும்.

எனினும், தமிழக கோவில்கள் ஆசாரப்படி மண்டலகால விரதத்துக்காக 17 ஆம் திகதி மாலை அணிவதிலும் தவறில்லை. அதுபோல சபரிமலை உட்பட கேரளாவின் அனைத்து கோவில்களிலும் மண்டல பூஜை வழக்கமான டிசம்பர் மாதம் 27 ஆம் திகதிக்குப் பதிலாக 26 ஆம் திகதியே நடந்து விடும். 27 இல் நடை அடைக்கப்பட்டு விடும்.

ஒருநாள் விடுபடுகிறது என்பதற்காக பக்தர்கள் குழப்பம் அடைய வேண்டியதில்லை. தங்கள் விருப்பப்படி இந்த விரதத்தை மேற்கொள்ளலாம் என்றார். (ஓ-6)

# இந்தியாவுக்கு உணவு வழங்குவதற்காக எத்தியோப்பியாவில் விவசாயப் பண்ணை

இந்தியாவுக்கு உணவு வழங்குவதற்காக ஒரு பெரிய விவசாயப் பண்ணை எத்தியோப்பியாவில் அமைக்கப்பட்டு வருகிறது.

1970 களின் பிற்பகுதி முதலே இந்தியா உணவு உற்பத்தியில் பெரும்பாலும் தன்னிறைவு கண்டுள்ளது என்றாலும் இந்தியாவின் சனத்தொகை மிக வேகமாக அதிகரித்து வருவதன் காரணமாகவும் தொழிற்சாலைகள் அமைப்பதற்காக விளை நிலங்களை தாரைவார்க்க வேண்டிய நிர்ப்பந்தம் காரணமாகவும் சீதோஷ்ண நிலை மாற்றங்கள் காரணமாகவும் இந்தியாவில் உணவுப் பற்றாக்குறை ஏற்படும் ஆபத்து அதிகரித்து வருகிறது.

எதிர்காலத்தில் இந்தியாவுக்கு தொடர்ந்து உணவு கிடைக்க வேண்டும் என்ற நோக்கில் இந்திய நிறுவனங்கள் வெளிநாடுகளில் உணவு உற்பத்தி செய்வது என்பதை வரிச் சலுகைகள் குறைந்த வட்டிகளுடன் கூடிய கடன்கள் உள்ளிட்ட பல்வேறு வழி வகைகள் மூலம் இந்திய அரசு ஊக்குவித்து வருகிறது. (ஓ-6)

# பழங்குடியினரால் தடுத்து நிறுத்தப்பட்ட ரயில் 5 மணி நேர போராட்டத்தின் பின் பொலிஸாரால் மீட்பு

## நக்ஸல்கள் இருவர் பலி



(கொல்கத்தா)

ஒரிசாவிலிருந்து டில்லி நோக்கி 1200 பயணிகளுடன் சென்று கொண்டிருந்த ராஜஸ்தானி எக்ஸ்பிரஸ் ரயிலை பழங்குடியினரின் பொலிஸ் எதிர்ப்புக் குழு சிறை பிடித்த தையடுத்து அவர்களுடனான 5 மணி நேர போராட்டத்தின் பின்னர் பொலிஸார் ரயிலை மீட்டனர்.

மேலும் கடத்திச் செல்லப்பட்ட புகையிரத சாரதி அனந்தராவ், துணை சாரதி கே. ஜே. ராவ் ஆகியோரையும் பழங்குடியினர் விடுதலை செய்தனர்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரிய வருவதாவது,

கடந்த செவ்வாய்க்கிழமை மேற்படி ரயிலை ஜார்கிராம் என்ற இடத்தில் தண்டவாளத்தில் மரங்களை வெட்டிப் போட்டும், சிவப்புக் கொடிகளைக் காட்டியும் பழங் குடியினர் 400 பேர் தடுத்து நிறுத்தினர். அதைத் தொடர்ந்து புகையிரத சாரதியையும் துணை சாரதியையும் கடுமையாகத் தாக்கி வந்தவர்களில் சிலர் கடத்திச் சென்றனர். ரயிலின் கண்ணாடிகளையும் சேதப்படுத்தினர்.

மேலும் தங்களது அமைப்பின் தலைவர் சத்ரதார் மகோதாவை உடனே விடுவிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர். ரயிலை எரிக்கப் போவதாகவும் மிரட்டல் விடுத்துள்ளனர்.

தகவல் அறிந்த ரயில்வே உயரதிகாரிகள் மற்றும் பொலிஸார் கடத்தப்பட்ட ரயில் நிறுத்தப்பட்ட இடத்தை வந்தடைந்தனர். அங்கு பொலிஸாருக்கும் நக்ஸல்களுக்கும் இடையே கடுமையான துப்பாக்கிச் சண்டை நடந்தது. இதில் நக்ஸல்கள் இருவர் பலியாயினர்.

தண்டவாளங்களில் கண்ணிவெடிகள் உள்ளதா என சோதனையிடப்பட்ட பின்னர் இன்னொரு ரயில் தண்ணீர், உணவுடன் அங்கு அனுப்பப்பட்டது. அந்த ரயில் மூலம் இரவு 9 மணியளவில் பயணிகள் மீண்டும் புவனேஸ்வர் கிளம்பினர்.

இந்நிலையில் கொல்கத்தாவில் நிருபர்களிடம் பேசிய மேற்கு வங்க முதல்வர் புத்த தேவ், மாவோயிஸ்ட் ஆதரவுடன் செயல்படும் மக்கள் கமிட்டி தலைவர் மகோதாவை விடுதலை செய்யும் பேச்சுக்கே இடமில்லை என்றார். (ஓ-6)

### ஈழத் தமிழர்களுக்காக தமிழ் மாணவர் பேரவை உண்ணாவிரதம்

இலங்கையில் முள்வேலி முகாம்களில் சிக்கி தவிக்கும் தமிழர்களை அவர்களின் சொந்த இடத்தில் உடனே குடியமர்த்திட மத்திய மாநில அரசுகளை வலியுறுத்தி தமிழ் மாணவர் பேரவை சார்பில் சென்னை சேப்பாக்கம் விருந்தினர் மாளிகை முன்பு நவம்பர் மாதம் 3 ஆம் திகதியன்று உண்ணாநிலை போராட்டம் நடைபெறவுள்ளது.

போராட்டத்திற்கு தமிழ் மாணவர் பேரவை தலைவர் திருமுருகன் தலைமை தாங்குகிறார். சென்னை உயர் நீதிமன்ற வழக்கறிஞர்கள் சங்கத் தலைவர் ஆர். சி. பால்கனகராஜ் உண்ணாநிலை போராட்டத்தை தொடங்கி வைக்கிறார். ஓய்வுபெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி தேவசகாயம் உண்ணாவிரதத்தை முடித்து வைக்கிறார். (ஓ-6)

# இலங்கை அகதிகளில் 25 குடும்பங்கள் தாய் நாடு திரும்ப விண்ணப்பித்துள்ளனர்

(செங்குன்றம்)

புழல் அகதிகள் முகாமில் உள்ள இலங்கையைச் சேர்ந்த சிலர் மீண்டும் தமது நாட்டிற்கு செல்ல விரும்பி அரசுக்கு மனு கொடுத்துள்ளனர். இலங்கையில் கடந்த காலங்களில் நடந்த உள்நாட்டு போர் காரணமாக ஏராளமானோர் தமிழகத்திற்கு அகதிகளாக வந்தனர். அவர்கள் இராமேஸ்வரம், புழல், கும்மிடிப்பூண்டி, செங்கல்பட்டு உள்ளிட்ட பல பகுதிகளில் உள்ள முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இதில் சென்னை அடுத்த புழல் பேரூராட்சிக்குட்பட்ட காவாங்கரையில் உள்ள முகாமில் 330 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 480 பேர் உள்ளனர். இவர்கள் திருகோணமலை, யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் வவுனியா உள்ளிட்ட இலங்கையின் பல்வேறு மாவட்டங்களை சேர்ந்தவர்கள். தங்கள் பகுதியில் அமைதி திரும்பிய நிலையில் ஒரு சிலர் முறையான அரசு அனுமதியுடன் மீண்டும் இலங்கைக்கு திரும்பிச் செல்வது வழக்கம். அந்த வகையில் இந்த ஆண்டில் இதுவரை பத்து குடும்பங்கள் தங்கள் நாட்டிற்கு சென்றுள்ளன.

இதையடுத்து தற்போது புழல் முகாமில் உள்ள 25 குடும்பத்தினர் மீண்டும் தங்கள் நாட்டிற்கு திரும்பிச் செல்ல திருவள்ளூர் மாவட்ட ஆட்சித்துறை நிர்வாகத்திடம் மனு கொடுத்துள்ளனர். இவர்கள் திருகோணமலை மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

அவர்களின் மனுக்கள் கியூ பிரிவு பொலிஸ் மூலம் விசாரிக்கப்பட்ட பின் உரியவர்களுக்கு இலங்கை திரும்ப அனுமதி அளிக்கப்படும் என்று கூறப்படுகிறது. (ஓ-6)

# விஜய நகரப் பேரரசு

39

இருதரப்புப் படைகளும் மோதின. ஆனால், சண்டை சிறிது நேரத்தில் முடிந்து விட்டது. அது நான்கு மணி நேரங்கூட நீடிக்கவில்லை. சண்டை மும்முரமாக நடந்து கொண்டிருந்த நேரத்தில் அந்த இரண்டு துரோகிகளும் தங்களுடைய போர் வீரர்களுடன் திடீரென்று தங்கள் அரசனுக்கு எதிராகத் திரும்பிவிட்டார்கள்.

அதனால் ஏற்பட்ட பெருங் குழப்பத்தைக் கண்டு அதிர்ச்சியும் அச்சமும் அடைந்த விஜயநகரப் படைகள் களத்தை விட்டு ஓடத் தொடங்கின.

ராமராயன் நைஜாம் ஷாவின் கையில் மாட்டிக் கொண்டான். அவன் உடனே ராமராயனுடைய தலையைவெட்டி அதனை ஓர் ஈட்டி முனையில் மாட்டி, இந்துப் போர் வீரர்கள் அனைவரும் பார்க்குமாறு உயர்த்திப் பிடித்தான். அதனைக் கண்டு களத்தை விட்டு ஓடிய இந்துப் போர் வீரர்களைத் துரத்திக்கொண்டுபோன முஸ்லிம் படையினர் ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட வர்களைக் கொன்றனர்.

இந்துப் படைகளில் பெருங் குழப்பம் ஏற்பட்டது. திரும்பி நின்று போர் புரிவதற்கும் தலைநகரைக் காப்பதற்கும் எவ்வித முயற்சியையும் யாரும் செய்யவில்லை. தலைநகருக்குச் செல்லும் வழி திறந்து கிடந்தது. தோற்றுப் போன செய்தியோடு போர்க்களத்திலிருந்து மனமுடைந்து திரும்பிய போர் வீரர்களும் அரசகுமாரர்களுமே தலைநகரத்திற்குள் முதலில் நுழைந்தனர்கள்.

தலைநகரத்தின் குடிமக்கள் எக்கேடு கெட்டாலும் சரியென்ற முறையில் திருமலை கருவூலத்திலிருந்த செல்வங்கள் அனைத்தையும் வாரி,1550 யானைகளின் மீது ஏற்றிக் கொண்டு, சிறையிலிருந்த அரசன் சதாசிவ ராயனுடனும் அரச குடும்பத்தைச் சேர்ந்த மகளிருடனும் தப்பி ஓடிவிட்டான்.

வெற்றிபெற்ற முஸ்லிம் படைகள் விஜய நகருக்குள் நுழைவதற்குள், திருடர்களும் காடுவாழ் மக்களும் கூட்டங் கூட்டமாக அந்த நகருக்குள் நுழைந்து அங்கு வாழ்ந்த ஆதரவில்லா மக்களைத் துன்புறுத்தி, அவர்களுடைய வீடுகளையும், கடைகளையும் கொள்ளையடித்தார்கள். அதன்பின் முஸ்லிம் போர்வீரர்கள் வந்தார்கள். " அவர்கள் நகர மக்களைத் தங்கள் வாளால் வெட்டி வீழ்த்தி னார்கள்.

வீடுகளுக்குத் தீவைத்தார்கள். கோடரியும் கடப்பாரையும் கொண்டு கட்டிடங்களை இடித்துத் தகர்த்தார்கள் ; எத்தனையோ நாள் இந்த நாச வேலையை அவர்கள் தொடர்ந்து செய்தார்கள். "இன்றும் வருவது கொல்லோ நெருநலும் கொன்று குவித்தவக் கூற்று" என்று மக்கள் அச்சத்தினாலும் துன்பத்தினாலும் ஒருநாளைக்கு எத்தனையோ முறை செத்துப் பிழைத்தார்கள். மீண்டும் சாவதற்கு! உலக வரலாற்றில் இத்தகையதொரு நாச வேலையை யாரும் எங்கும் எப்போதும் கண்டிருக்க முடியாது" என்று கூறலாம்.

## கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் நடந்த ஆய்வரங்கச் சிறப்புரைகள் - 2009

அது எவ்வளவு பெரிய நகரம்! எவ்வளவு அழகானது! எவ்வளவு வீறார்ந்தது! அதை நாம் நேற்றுத்தான் கண்டு களித்தோம். அந்தோ! இன்று அது அழிந்து வீழ்ந்து விட்டது. நேற்று அந்த நகரத்தில் மக்கள் பொங்கி வழிந்தார்கள்.

பல்வேறு தொழில் களிலும் அவர்கள் பரபரப்பாக ஈடுபட்டார்கள். செல்வச் செழிப்பில் அந்த நகரம் செம்மாந்து நின்றது.ஆனால், இன்று அழிந்துவிட்டது! ஐயகோ, எவ்வளவு கம்பீரமான நகரம் எவ்வளவு விரைவில் அழிந்துவிட்டது! வெறி பிடித்த விலங்கு போன்ற பகைவர்கள் அதனை இன்று பிடித்து, பல்லாயிரக்கணக்கான மக்களைப் படுகொலை செய்து, கட்டடங்களை யெல்லாம் இடித்து தகர்த்துவிட்டார்கள்.

அந்த வெறிச் செயலை, கொலைச் செயலை, பலநாள் தொடர்ந்து நடந்த அந்த மிருகத் தனத்தை அந்தப் பயங்கரமான அழிவு வேலையை விவரிக்கச் சொற்களும் உளவோ? அந்த அழிவிலிருந்து விஜய நகரம் மீளவேயில்லை. அதனைப் பழைய நிலைக்குக் கொண்டுவரவேண்டும் என்று திருமலை சிறிது காலத்திற்குப் பின் முயன்றான்.ஆனால், அந்த முயற்சி வெற்றி பெறவில்லை.

திருமலை பெனுகொண்டாவிற்குக் குடியேறி, வலிமை மிக்க படையொன்றினை மீண்டும் உருவாக்கப் பல வகையிலும் முயன்றான். பணத்தட்டுப்பாடு சமாளிக்கமுடியாமல் போனபோது, போர்த் துக்கீச வாணிகர்களிடமிருந்து அவன் பல குதிரைகளை வாங்கிக் கொண்டு, அவற்றுக் குப் பணங்கொடுக்க மறுத்துவிட்டான். 'விஜய நகரக் குடிமக்கள் ராமராயனுடைய மகன் திம்மன் என்ற பெத்த திருமலைதான் பகர ஆளுநனாக (அதாவது, சதாசிவராயன் பெயரில் ஆட்சி புரிபவனாக) இருக்க வேண் டும் என்று விரும்பினார்கள். திருமலை விஜய நகரை விட்டு விட்டுப் பெனுகொண்டாவிற்குக் குடியேறியதற்கு அதுவும் ஒரு முக்கியமான காரணமாக இருந்தது. நாட்டில் அமைதி யின்மையும் குழப்பமும் ஆறாண்டு நில வின.

அதன்பிறகுதான் திருமலை தானே அரசனென்று அரியணையேற முடிந்தது. பயிற்சியும் அனுபவமும் உடைய சிவில் நிர்வாக அலுவலர்களைத் தள்ளிவிட்டு ராமராயன் தன்னுடைய உறவினர்களை உயர்பதவிகளில் அமர்த்தினான் என்பதை நாம் முன்பு கண்டோம்.

அந்தத் தவறான கோட்பாட்டின் தீய விளைவுகள் ராமராயனுடைய துன்பங் கள் அதிகரிப்பதற்குக் காரணமாயின. நாட் டின் பல பகுதிகளிலும் கலகங்கள் தோன்றின. குற்றஞ் செய்வோர் எண்ணிக்கையும் குற்றங்களும் அதிகரித்தன.

பாளையக்காரர்கள் கொள்ளைக் கூட்டத் தினர் ஆகியவர்களுடைய கொடுமை மிகுந்தது. மதுரை, தஞ்சாவூர், செஞ்சி ஆகிய இடங்களிலிருந்த நாயக்கர்களுடைய ஆட்சி நடைமுறையில் முழு உரிமையு டைய ஆட்சியாக மாறியது இந்தக் காலத்தில் தான் என்று கூறலாம்.

பேரரசுக்கு இத்தகையதொரு பெருங் கேடு நேர்ந்த பின்னரும் பெத்த திருமலைக் குப் புத்தி வந்ததாகத் தெரியவில்லை. அவன் தன்னுடைய சிற்றப்பனுக்கு எதிராகத் தனக்கு உதவி செய்யுமாறு அலி அடில்ஷாவை வேண்டினான்.

அவன் முதலில் விஜயநகருக்குச் சென்று பின்னர் பெனுகொண்டாவை முற்றுகையிடுவதற்கு ஒருபடையை அனுப்பினான். ஆனால், சவரம் சென்னப்பநாயக்கன் என்ற திறமை மிக்க தளபதியின் தலைமையில் சண்டையிட்ட பெனுகொண்டாவை அடில்ஷாவின் படைகள் பிடிக்க முடியவில்லை. திருமலை இப்போது நைஜாம்ஷாவின் துணையை நாடினான். நைஜாம்ஷா பிஜப்பூர் மீது படையெடுத்தான். அதனால்,அடில்ஷா தன்னுடைய நாட்டைக் காப்பதற்காக விஜயநகரிலிருந்து திரும்பினான்(1567).

பேராசிரியர்
க.அ.நீலகண்டசாஸ்திரிகள்

விரைவில்,பிஜப்பூரைத் தாக்குவதற்காக நைஜாம்ஷாவும் குதுப்ஷா வும் திருமலையை அழைத்தார்கள். அவனும் அதற்கிசைந்தான். ஆனால்,அடில்ஷா முஸ்லிம் அரசர்களோடு சமாதானஞ் செய்து கொண்டு, திருமலையை எதிர்த்து,1568 இல் அவனுடைய நாட்டைத் தன் முழுவலிமையுடனும் தாக்கி, ஆதோனியை முற்றுகையிட்டு, பெனு கொண்டாவலிலிருந்து ஆதோனிக்கு உதவி போய்ச் சேராமல் தடுப்பதற்காகப் பெனுகொண்டாவுக்கும் ஒரு படையை அனுப்பினான். பெனுகொண்டா அடில்ஷா வின் படையை எதிர்த்து மீண்டும் சமாளித் தது. ஆனால், ஆதானி வீழ்ந்து விட்டது. (தொடரும்)

## முகாம் மாணவர்களின் புலமைப்பரிசில் பெறுபேறுகளை காலதாமதமின்றி உடனடியாக வெளியிட வேண்டும்

### இலங்கை ஆசிரியர் சங்க தலைவர் கோரிக்கை

(கொழும்பு)

வடக்கில் இடம்பெயர்ந்தோர்முகாம்களில் இருந்து 5 ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய சுமார் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகளின் பெறுபேறுகள் இதுவரையில் வெளியிடப்படவில்லை என இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

நாட்டின் ஏனைய பகுதிகளில் புலமைப் பரிசில் பரீட்சைக்கான பெறுபேறுகள் வெளியாகி ஒரு மாத காலமாகியுள்ள நிலையில் முகாம்களில் தோற்றிய மாணவர்களுக்கு பெறுபேறுகள் கிடைக்காமையால் அவர்கள் உளரீதியாகப் பாதிப்பிற்குள்ளாகி உள்ளதாகவும் மேற்படி சங்கம் குறிப்பிட்டுள்ளது.

இதுதொடர்பாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தலைவர் ஜோசப் ஸ்டாலின் கூறுகையில்,போதியளவு வசதி வாய்ப்புக்கள் இல்லாத ஒரு சூழ்நிலையிலேயே பாரிய எதிர்பார்ப்புகளுடன் வன்னி முகாம் வாழ் மாணவர்கள் 5 ஆம் தரப் புலமைப் பரீட்சைக்குத் தோற்றினார்கள்.

ஆனால் மேற்படி பரீட்சையின் பெறுபேறுகள் இலங்கையின் அனைத்துப் பகுதிகளுக்கும் வெளியிடப்பட்டுள்ள நிலையில் முகாம்களில் உள்ளவர்களுக்கு வெளியிடப்படாமையானது கண்டனத்துக்குரிய விடயமாகும்.

முகாம்களில் பெறுபேறுகளுக்காக எதிர்பார்ப்புடன் காத்திருந்த மாணவர்களும் பெற்றோர்களும் இன்று பாரியளவு உள ரீதியாகப் பாதிப்பிற்குள்ளாகியுள்ளனர்.

எனவே காலதாமதமின்றி மேற்படி பெறுபேறுகளை உடனடியாக வன்னி முகாம்களுக்கு வெளியிட வேண்டும் எனக் கூறினார். (ஓ-6)

## பால்நிலை சமத்துவ இடைவெளி சுட்டெண் பட்டியலில் இலங்கைக்கு 16 ஆம் இடம்

பால்நிலை சமத்துவ இடைவெளி சுட்டெண் உலக தர வரிசை அடிப்படையில் இலங்கை 16 ஆம் இடத்தை வகிப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உலகப் பொருளாதார பேரவையினால் நடாத்தப்பட்ட ஆய்வுகளின் அடிப்படையில் இந்தத் தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

பிரான்ஸ்,அமெரிக்கா போன்ற நாடுகளைப் பின்தள்ளி இலங்கை 16 ஆம் இடத்தை வகிப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது

பால்நிலை சமத்துவ இடைவெளி சரியான முறையில் பேணப்படும் நாடுகளின் வரிசையில் ஐஸ்லாந்து, பின்லாந்து மற்றும் நோர்வே ஆகிய நாடுகள் முன்னணி வகிக்கின்றன.

சில நாடுகளில் பால்நிலைச் சமத்துவம் பேணப்படாத காரணத்தினால் பாரியளவு மனித வளம் வீண் விரயமாக்கப்படுவதாக சுட்டிக்காட்டப்படுகிறது. (6)

## 50 இலட்சம் ரூபா பிணையில் கொத்தலாவல விடுதலை

(கொழும்பு)

செலிங்கோ குழும நிறுவனத்தின் தலைவரும், பிரபல சமூக சேவையாளருமான லலித் கொத்தலாவலவை நீதிமன்றம் 50 லட்சம் ரூபா பிணையில் நேற்று முன்தினம் விடுதலை செய்துள்ளது.

பிணை நிபந்தனைகள் பூர்த்தி செய்யப் பட்ட பின்னரே நீதிமன்றம் இவரைப் பிணை யில் விடுதலை செய்துள்ளதாகக் கூறப்படு கிறது.

பிணை நிபந்தனைகளைப் பூர்த்தி செய்வதற்கு ஏற்பட்ட தாமதமே தொடர்ச்சியாக அவரைத் தடுப்புக் காவலில் வைத்திருந்தமைக்குக் காரணம் என்றும் காவல்துறையினர் தெரிவித்துள்ளனர். (ச-5)

## வடக்கின் வசந்தம் வேலைத் திட்டத்தை துரிதப்படுத்துவதற்கென இயந்திரங்கள் கையளிப்பு

(கொழும்பு)

நீண்டகால கடனுதவியின் கீழ், இறக்குமதி செய்யப்பட்ட இயந்திர உபரகணாங்கள் அரசாங்கத்திடம் நேற்று முன்தினம் கையளிக்கப்பட்டன. காலிமுகத்திடலில் வைத்து இந்த இயந்திர உபகரணாங்கள், ஒப்படைக்கப்பட்டன.

ஜனாதிபதி செயலணியின் தலைவரும் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகருமாகிய பாராளுமன்ற உறுப்பினர் பசில் ராஜபக்ஷவின் ஆலோசனைக்களுக்கமைய இந்த இயந்திரங்கள் இலங்கைக்கு கொண்டு வரப்பட்டன.

பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் இலங்கைக்கான சீனத்தூதுவர் யெங்கியூ பிங் ஆகியோரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

சீனாவிலிருந்து கிடைத்த நீண்ட காலக் கடனுதவியின் கீழ் இந்த இயந்திரங்கள் இலங்கைக்கு கொண்டு வரப்பட்டுள்ளன.


இராணுவத்தளபதி மேஜர் ஜெனரல் ஜெகத் ஜெயசூரிய, வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி, பெருந்தெருக்கள் அமைச்சின் செயலாளர் அட்மிரல் வசந்த கருணாகரகொட ஆகியோரிடம், இந்த இயந்திரங்கள் ஒப்படைக்கப்பட்டன.,

2049 மில்லியன் ரூபா பெறுமதியான இந்த இயந்திரங்களில் 29 ட்ரக் வண்டிகள், 15 நீர் பவுசர்கள், 8 பெக்கோ இயந்திரம் உள்ளிட்ட 257 இயந்திரங்கள் அடங்குகின்றன.

வடக்கிலுள்ள வீதிகள் மற்றும் குளங்களை புனரமைத்தல் மற்றும் நீர்வழங்கல் வேலைத் திட்டத்தை முன்னெடுத்தல் ஆகியவற்றை மேற்கொள்வதற்கே இந்த 257 இயந்திரங்களும் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ஒ-6-3)

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

# கதிர்த் தொழிற்பாட்டு சமதானியின் பிரயோகங்கள்



கதிர்த் தொழிற்பாட்டு இரசாயனத்தில் ஒரு மூலகம் இன்னுமொரு மூலகமாக மாறப் படல் கதிர்த் தொழிற்பாட்டு தாக்கம் எனப் படும்.

$${}^{12}_{6}C + {}^{4}_{2}\alpha \longrightarrow {}^{16}_{8}O + \gamma$$

சில கருக்கள் உறுதியானவை. சில உறுதியற்றவை. உறுதியற்ற கருக்கள் சிறிய சக்தித் துணிக்கைகளைக் காலலாக்கும்.

$${}^{234}_{90}Pa \longrightarrow {}^{234}_{91}Pa + {}^{0}_{-1}e$$

இம் மூலகங்கள் கதிர்த் தொழிற்பாட்டு மூலகங்கள் எனப்படும். 1896 ஆம் ஆண்டு கென்றி பெக்குறல் கதிர்வீச்லை கண்டு பிடித் தார். இதை கதிர்த் தொழிற்பாடு என அழைத் தார். அதன் பின்னர் மேரிக்கியூரியும் அவரது கணவரும் சேர்ந்து மூன்று கதிர்த் தொழிற் பாட்டு மூலங்களைக் கண்டுபிடித்தனர். அவையாவன தோரியம் (Th), ரேடியம் (Ra), பொலோனியம் (Po) என்பனவாகும்.

$${}^{218}_{84}Ra + {}^{206}_{82}Pb + x\,{}^{4}_{2}He^{2+} + y\,{}^{0}_{-1}e$$

1903 ஆம் ஆண்டு கியூரியும் பெக்கியுரலும் தமது கண்டுபிடிப்பிற்கான நோபல் பரிசை பகிர்ந்து கொண்டனர். சாதாரணமாக கதிர்த் தொழிற்பாட்டு மூலகங்கள் தன்னிச்சையாக கதிர்வீசலை மேற்கொள்வதுடன் பிறிதொரு புதிய மூலகமாக மாறும். உதாரணம் அணு எண் 83 க்கும் மேற்பட்ட மூலகங்களின் கருக்கள் யாவும் உறுதியற்ற கதிர்த் தொழிற்பாடுடையன.

இம்மூலகங்கள் கதிர்த் தொழிற்பாட்டு மூலகங்கள் எனப்படும். கதிர்த் தொழிற்பாட்டு சமதானியின் முக்கியமான பிரயோகம் கருப் பிளவின் மூலம் சக்தியை உருவாக்கும். துர் அதிஸ்ரவசமாக இச் செயன்முறை அணுகுண்டு தயாரிப்பிற்கும் பயன்படுத்தப்படுகின்றது. இதன் மூலம் பல்லாயிரக்க ணக்கான மக்களினது அழிவிற்கும் உடமை அழிவிற்கும் காரணமானது. இங்கு கதிர் தொழிற்பாட்டு மூலகத்தின் ஆக்கல் செயற்பாடுகளினை பற்றி விளக்கப்படுகின்றது.

**மருத்துவத்தில் கதிர்த் தொழிற்பாட்டு சமதானியின் பயன்கள்.**

கதிர்த் தொழிற்பாட்டு சமதானியானது மருத்துவத்துறை பலவழிகளில் பயன்படுகின்றது. அவையாவன இச் சமதானிகளை பயன்படுத்தி பதார்த்தங்கள் உடலினுள் பாயும் வழிகளை இனம் காணவும் இழையத்திலுள்ள திரவங்களை (Fluid) தேவைக் கேற்ப அகற்றவும் பயன்படுகின்றது. இச்சமதானிகள் உடலினுள் ஊசி மூலம் அல்லது வாயினூடாக வழங்கப்படும்.

**இப்பிரயோகங்களுக்கு சில உதாரணங்கள்.**

**சிறு நீரகத்தின் தொழிற்பாட்டை அறிதல்.**

நோயாளியின் நரம்பினுள் அயடீன் ($^{123}I$) சமதானி திரவ நிலையில் செலுத்துவதற்கு போதியளவு நேரத்திற்கு முன் அதாவது 30 நிமிடத்திற்கு முன் போதியளவு நீர் கொடுக்கப்படும். கதிர்த் தொழிற்பாட்டு மூலகத்தின் அரை வாழ்வு காலம் எனப்படுவது ஒரு மூலகத்தின் கதிர்த் தொழிற்பாடு அரைப்பங்காக மாறுவதற்கு எடுக்கும் காலமாகும். அயடீன் ($^{123}I$) இன் அரை வாழ்வு காலம் 13 மணித்தியாலம். 15 நிமிட நேரத்திற்கு சிறுநீரகத்தில் கதிர்த் தொழிற்பாட்டுத் தொழிற்பாடு கதிர் தொழிற்பாட்டு உணரிமூலம் அவதானிக்கப் படும். சாதாரண சிறுநீரகத்தில் கதிர்த் தொழிற் பாடுடைய மூலகத்தின் கதிர் தொழிற்பாடு கூடி பின் அவை அகற்றப்படுவதால் குறையும். ஆனால் சிறுநீரகத்தின் தொழிற்பாடு தடுக்கப்படின் கதிர் தொழிற்பாட்டு மூலகத்தின் அளவு கூடும். ஆனால் அதன் அளவு குறையாது.

**தைரொயிட்**

தைரொயிட் gland ஆனது அயடீனை உறிஞ்சி அதனால் உருவாக்கப்படும் ஓமோனின் தொழிற்பாட்டைக் கட்டுப்படுத்தும். அயடீன் உள்ளெடுக்கப்படும் அளவை கதிர்த் தொழிற்பாடுடைய அயடீன் ($^{131}I$) பயன்படுத்தி அறியலாம். நோயாளியின் தைரொயிட் சுரப்பிக்கு கதிர்த் தொழிற்பாடுடைய அயடீன் வழங்கப்படும். அதேவேளை அதேயளவு அயடீன் பயன்படுத்தி கரைசல் தயாரிக்கப் பட்டு (Phantom) 24 மணித்தியாலயத்தின் பின் கதிர்த் தொழிற்பாடு ஒப்பிடப்பட்டு நோயாளியின் தைரொயிட் சுரப்பியினால் உள்ளெடுக்கப்படும் அயடீன் அளவு கணிக்கப்படும்.

$$\frac{\text{தைரொயிட் சுரப்பியில் கதிர்த்தொழிற்பாடளவு}}{\text{கரைசலில் (Phantom) கதிர்த்தொழிற்பாடளவு}} \times 100\%$$

சாதாரண மனிதனில் தைரொயிட் சுரப்பியால் 20-50% அயடீன் 24 மணித்தியாலயத்தில் உறிஞ்சப்படும்.

**மூளையூடாக செல்லும் குருதியின் அளவு**

*0.5ml $^{99}Te$* (ரெலுரியம்) ஆல் அடையாளமிடப்பட்ட சோடியம் பேர் ரெக்னேற் கரைசல் ஆனது உட்செலுத்தப்பட்டு அவ் கதிர் தொழிற்பாட்டு சமதானியானது மூளையூடு செல்லும் பாதையானது கதிர்த் தொழிற்பாட்டு உணரி மூலம் உணரப்படும். இதன் மூலம் மூளையூடு குருதி செல்லும் பாதை அறியப்படும்.

**குருதியின் கனவளவை அளத்தல்**

மனிதனின் அல்புமின் (albumin serum) இனுள் தெரிந்தளவுடைய கதிர்த் தொழிற்பாட்டு $^{125}I$ (அயடீன்) ஐ ஆனது (அரைவாழ்வு காலம் 60 நாள்) செலுத்தப்படும். ஒரு குறிப்பிட்ட நேரத்தின் பின் சிறிதளவு குருதி எடுக்கப்பட்டு அதிலுள்ள கதிர் தொழிற்பாட்டு அளவு அறியப்படும்.

நோயாளியில் உள்ள குருதியின் அளவு ஆனது குருதியிலுள்ள கதிர்த் தொழிற்பாட்டு மூலகத்தின் ஐதாக்கல் குணகத்தில் இருந்து கணிக்கப்படும்.

**கதிர்த் தொழிற்பாட்டுசிகிச்சை**

புற்று நோய்க் கலங்கள் $^{60}Co$ (கோபோல்ற்) இல் இருந்து வெளிவரும் உயர்சக்தி கொண்டு கதிர்வீசல் மூலம் அழிக்கப்பட்டு சிகிச்சையளிக்கப்படும்.

**விவசாயத்துறையில் கதிர்த் தொழிற்பாட்டு மூலகத்தின் பயன்கள்**

- கதிர்த் தொழிற்பாடு பொஸ்பரசு (P) கொண்ட உரத்தைத் தாவரத்திற்கு இடப்படும். பின் தாவர உடலின் பகுதிகளில் உள்ள கதிர் தொழிற்பாடு அறியப்படும். இதன் மூலம் தாவர உடலினுள் பொஸ்பரசு சமதானியின் பரம்பல் அறியப்படும். அத்துடன் தாவர வளர்ச்சி, போசணைகளை உள்ளெடுத்தல் பொறிமுறைகளும் அறியப்படும்.
- கதிர் வீச்சைப் பயன்படுத்தி விவசாயத் துறையில் புதிய தாவர இன வகைகளை உருவாக்க முடியும். இதன் மூலம் கூடியளவு உற்பத்தியைத் தரக்கூடிய இன வகைகளை உருவாக்க முடியும்.
- உருளைக்கிழங்கு, வெங்காயம் போன்ற உணவுப் பதார்த்தங்களை நீண்ட காலத்திற்கு பேணிப் பாதுகாக்க சில நாடுகளில் சில கதிர் வீசல்கள் பயன்படும்.
- கதிர் வீசல்கள் பீடைகளை அழிப்பதற்கும் வரையறுக்கப்பட்ட அளவில் சில வேளைகளில் பயன்படும்.

நிலத்தின் கீழான நீர்க்குழாய்களில் அல்லது எண்ணெய் குழாய்களில் பாதிப்பு ஏற்படும் போது பாதிப்பு ஏற்பட்டுள்ள இடத்தை அறிய கதிர் தொழிற்பாடு உபயோகிக்கப் படும். கதிர்த் தொழிற்பாட்டு சமதானியை கொண்ட நீர் ஆனது குழாயூடாக பாச்சலில் உள்ள போது வெளிப்பக்கத்தில் உள்ள கதிர்வீசல் மூலம் குழாயில் வெடிப்பு ஏற்பட்டுள்ள இடத்தை அறிந்து கொள்ளலாம்.

**கதிர்க்காபன் தேதியிடல்**

உயிர்வாழும் தாவரங்கள், மரங்கள் சிறிய அளவில் 14C (காபன்) ஐ கொண்டுள்ள வளியிலுள்ள Cosmic கதிர்கள் அணுக்களின் கருக்களுடன் மோதி உருவாக்கும். நியூத்திரன்கள் நைதரசன் அணுவுடன் மோதி ${}^{14}_{6}C$ (காபன்) ஐ உருவாக்கும்.

$${}^{1}_{0}n + {}^{14}_{7}N \longrightarrow {}^{14}_{6}C + {}^{1}_{1}P$$

வளியில் உள்ள $CO_2$ ஆனது தாவரத்தால் ஒளித் தொகுப்பின் போது உள்ளெடுக்கப்படும் போது ${}^{14}_{6}C$ காபனைக் கொண்ட $CO_2$ உம் உள்ளெடுக்கப்படும் ${}^{14}_{6}C$ இன் அரை வாழ்வு காலம் 5730 வருடங்கள்.

தாவரம் இறந்த பின் இத் தாவரங்களால் $^{14}C$ காபன் உள்ளெடுக்கப்படாது எனவே 5730 வருடங்களின் பின் ஆரம்பத்தில் இருந்த அளவுடைய கதிர்த் தொழிற்பாடுடைய காபனில் 50% ஆன கதிர்த் தொழிற்பாடு அறியப்படும்.

எனவே உயிரற்ற மரத்தின் வயது ஆனது தற்போது வெட்டப்பட்ட மரத்தின் கதிர்த் தொழிற்பாட்டு அளவிலிருந்து கணிக்கப்படும். ஆரம்பத்தில் உள்ள கதிர் தொழிற்பாட்டு அளவு தற்போது உயிர் வாழும் மரத்திலிருந்து அறியப்படும். இவற்றிலிருந்து வெட்டப்பட்ட தாவரத்தின் வயது அறியப்படும்.

**கைத் தொழில் துறையில் கதிர்த் தொழிற்பாட்டு மூலகத்தின் பயன்கள்**

கைத் தொழில் துறையில் கதிர்த் தொழிற்பாடானது பலவழிகளில் பயன்படுத்தப்படுகின்றது. காமா (γ) கதிர் வீசலை (gamma rays) பயன்படுத்தி பலவகைப் பொருட்களின் தடிப்பு அறியப்படும். கதிரானது தடிப்பு அளக்க வேண்டிய பொருளின் ஊடாக செலுத்தப்படும் போது தெறிப்படையச் செய்யப்படும் அல்லது ஊடுபுகவிடப்படும் கதிர்களின் எண்ணிக்கையை அளவிடல் மூலம் தடிப்பு துணியப்படும்.

இம்முறையானது பொதுவாக பல கைத் தொழிற்சாலைகளில் பயன்படும் அவற்றுள் சில பின்வருமாறு,

1) கார் தயாரிப்பு தொழிற்சாலைகளில் அதன் மேற் தகட்டில் சீரான தடிப்பை பெற உதவும்.

2) விமானத் தயாரிப்பு தொழிற்சாலையில் விமான இயந்திரங்களில் வெடிப்புக்கள் உண்டா என அறிதல்.

3) குழாய்களை உருவாக்கும் தொழிற்சாலையில் ஒட்டுகளின் உறுதியை ஆராயப் பயன்படும்.

**கருச் சக்தியைப் பயன்படுத்தி மின் உற்பத்தி செய்தல்**

$^{235}U$ (யுரேனியம்) சமதானியினது பிரிவுத் தாக்கத்தின் மூலம் உருவாகும் சக்தியிலிருந்து மின்சக்தி உருவாக்கப்படும். இவ் சமதானியானது சில km/s வேகம் கொண்ட நியூத்திரன்களுடன் (thermal energy neutrons) மோதி பிரிகையடையக் கூடியது.

$${}^{235}_{92}U + {}^{1}_{0}n \longrightarrow {}^{95}_{37}Rb + {}^{138}_{55}Cs + 3\,{}^{1}_{0}n$$

ஆனால் $^{238}U$ சமதானியானது அவ்வாறு பிரிகையடையாது. ஆனால் இவ் சமதானி நியூத்திரன்களை ஏற்று $^{239}Np$ (நெப்ரியூனியம்) ஐ உருவாக்கும்.

$${}^{238}_{92}U + {}^{1}_{0}n \longrightarrow {}^{239}_{92}U \longrightarrow {}^{239}_{93}Np + {}^{0}_{-1}e$$

பின் கதிர்த் தொழிற்பாட்டுத் தேய்வு மூலம் $^{239}Pu$ (புளுட்டோனியம்) ஐ உருவாக்கும். இவ் $^{239}Pu$ ஆனது குறைந்த சக்தி கொண்ட நியூத்திரன்களுடனும் மோதி பிரிகைக்குட்படும்.

$${}^{239}_{93}Np \longrightarrow {}^{239}_{94}Pu + {}^{0}_{-1}e$$

$^{235}U$, $^{239}Pu$ இன் பிரிகையால் கிடைக்கும் வெப்ப சக்தியினால் நீராவி, தண்ணீர், காற்றின் வேகத்தால் இயங்கும் சக்கரம் (turbines) ஐ இயங்கச் செய்யப்பட்டு அதன் மூலம் மின் சாரம் உற்பத்தி செய்யப்படும்.

A. மஞ்சீவன்
B.Sc. (Hons), இரசாயனவியல்

Chemisphere (2005 to 2006) University of Jaffna.
S.K.Jain(1995)Chemistry for secondary Schools.

## வாரத்திற்கு ஒரு புதிர்! 7

**குருதியில் காணப்படும் கலவகைகளுள் முதிர்ச்சியடைந்த நிலையில் கருவுற்றிருப்பது எது?**

**விடைகளை 11.11.2009 இற்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி**

Mr. V. Senthil
Editor, Section A
Jaffna Science Association
Dept. of Physics,
University of Jaffna. Jaffna.

**சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 250/- பணப்பரிசு வழங்கப்படும்.**
இப்பணப் பரிசினை யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட, மீன்பிடியியல் துறையில் கலாநிதி சி. குகநாதனிடம் (தலைவர் பிரிவு A) நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

பரிசுக்கு அனுசரணை வழங்குவோர் :
மக்கள் வங்கி,
யாழ். பல்கலைக்கழக கிளை.

**புதிர் 5 க்கான 250/- பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

மதியமுதன் ஜோன் பிரியந்த்
இல.20, பேரின்பநாயகம் ஒழுங்கை
கச்சேரி, யாழ்ப்பாணம்.

**புதிர் 6 இற்கான விடை : வெங்கடராமன் ராமகிருஷ்ணன்**

**யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்**
**புதிர் இல . 07**

சரியான விடை ..............................
முழுப்பெயர் ..............................
முகவரி ..............................
..............................
கையொப்பம் ..............................

புரிந்து கொள்ளாத போதும், பொறாமைப்படும் போதும் மனிதன் மற்றவனை முட்டாளாகக் கருதி விடுகிறான்.

– சாக்ரடீஸ்

வலம்புரி

## இறைவனின் தண்டனைக்கு ஆளாகுவீர்கள்...

நேற்று முன்தினம் யாழ்ப்பாண மாநகர சபையின் முதலாவது கூட்டம் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பிக்கப்பட்டது.

நல்லூர்க் கந்தனின் ஆலயத்தில் இருந்து மங்கல வாத்தியத்துடன் முதல்வர்– உறுப்பினர்கள்– விருந்தினர்கள் அழைத்து வரப்பட்டனர்.

ஆரம்ப நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் கலந்து கொள்ளவில்லை.

நாங்கள் எதிர்க்கட்சிகள் என்ற கோதாவில் ஆரம்ப நிகழ்வை அவர்கள் புறக்கணித்தார்களாம்.

இந்தியாவில் டாக்டர் மன்மோகன்சிங் பிரதமராகப் பதவி ஏற்றபோது முன் வரிசையில் அத்வானி இருந்தார்.

மன்மோகன்சிங்கும் அத்வானியும் கைலாகு கொடுத்து ஆனந்தப்பட்டனர்.

இதுவல்லவோ மனித சால்பு என்று கூறுமளவிற்கு இந்திய தேசத்தின் பண்புடமை மேல் ஓங்கியுள்ளது.

ஆனால் யாழ். மாநகர சபையில் அந்தப் பண்பாட்டைக் காணமுடியவில்லை. மாநகர முதல்வர் சம்பிரதாய பூர்வமாக யாழ். மாநகரத்தின் மாநாட்டு மண்டபத்தில் பதவி ஏற்றபோது எதிர்க்கட்சியினரும் கலந்து கொண்டிருக்கலாம். இது பற்றி அதிகம் விமர்சிக்க விரும்பவில்லை.

ஆனாலும் எதிர்க்கட்சியினரும் அங்கிருந்திருந்தால் சமயத்தலைவர்கள் ஆற்றிய உரையை, யாழ். அரச அதிபர் க.கணேஷ், யாழ். பல்கலைக் கழகதுணைவேந்தர்பேராசிரியர்என்.சண்முகலிங்கன் ஆகியோர் ஆற்றிய கருத்தாழம் மிக்க உரைகளை கேட்டிருக்க முடியும்.

சமயத் தலைவர்கள் ஆற்றிய ஆசியில் முஸ்லிம் மதத்தின் சார்பில் ஆசி வழங்கிய மௌலவி மொபாறக் கூறிய ஒரு விடயம்,

மாநகர சபையின் உறுப்பினர்களாகிய நீங்கள் மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்கள். மக்களுக்குப் பணி செய்யும் கடமையைப் பொறுப்பேற்றுள்ளீர்கள்.

நீங்கள் அந்தப் பணியை நேர்மையாக–விசுவாசமாக– ஊழல் இன்றி செய்ய வேண்டும். இதனை நீங்கள் செய்யத் தவறினால் அல்லாவின்–இறைவனின் தண்டனைக்கு ஆளாகுவீர்கள் என மிகத் தெளிவாக–துணிவாக எடுத்துக் கூறினார்.

இந்த உரையை கேட்பதற்கு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இல்லையே என்ற வருத்தம் இருந்தாலும்,

மௌலவி கூறிய இறைவனின் தண்டனைக்கு ஆளாகிவீர்கள் என்ற செய்தியை அறிய வேண்டும் என்பதற்காக இவ்விடத்தில் அதைப் பிரஸ்தாபித்தோம்.

கூடவே ஆளும் சபையினருக்கும் ஞாபகப் படுத்துவதற்காக.

இரத்ததான வாரம் 24 முதல் 30 வரை

உயிர் காக்கும் உன்னத பணியில் ஒன்றிணைவோம் வாருங்கள்



இரத்ததானம் - உங்கள் பங்களிப்பு

- தொடர்ந்து குறிப்பிட்ட கால இடைவெளியில் இரத்தானம் செய்யலாம்–4 மாதங்களுக்கு ஒரு முறை.
- உங்கள் நண்பர்களையும் உறவினர்களையும் இரத்தான சேவையில் இணைத்தல்
- இரத்த வங்கியுடன் தொடர்பு கொண்டு உங்கள் ஊர்களிலும் அலுவலகங்களிலும் நடமாடும் இரத்தான முகாம்களை ஒழுங்கு படுத்தல்
- ஊர் விழாக்களின் போது இரத்தானம் தொடர்பான துண்டுப்பிரசுரங்களை விநியோகித்தும் சுவரொட்டிகளை ஒட்டியும் விழிப்புணர்வை ஏற்படுத்தல்

இரத்தவங்கி, போதனாவைத்தியசாலை, யாழ்ப்பாணம். 021-222 3063

### நிறைவேற்று அதிகாரத்தை முறியடிக்க

# எதிர்க்கட்சிக் கூட்டமைப்பில் ஜே.வி.பியையும் இணைத்துக்கொள்ள பேச்சுவார்த்தை

## திஸ்ஸ அத்தநாயக்க தெரிவிப்பு

(கொழும்பு)

நிறைவேற்று அதிகாரம் நாட்டை தவறான பாதையில் இட்டுச்செல்கின்றது. இதனை முறியடிப்பதே எதிர்க்கட்சிகளின் கூட்டணி கொண்டுள்ள நோக்கம். எனவே, இவ்விடயத்தில் ஒருமித்த கருத்துள்ள ஜே.வி.பி.யையும் இணைத்துக் கொள்வதற்கு பேச்சுக்கள் இம்பெற்று வருகின்றன என ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது. எதிர்க்கட்சிகளின் கூட்டணி என்ற ஐக்கிய தேசிய முன்னணியில் ஐ.ம.மு., ஸ்ரீல.மு.கா., ஸ்ரீல.க.க.மக்கள் பிரிவு உள்ளிட்ட 20க்கும் மேற்பட்ட அரசியல் கட்சிகள் மேலும் 20 க்கும் மேற்பட்ட சிவில் அமைப்புக்களும் இணைந்து செயற்பட முன்வந்துள்ளன. இந்நிலையில் ஐக்கிய தேசிய முன்னணியின் கூட்டு ஒப்பந்தம் நவம்பர் முதல்வாரத்தில் கைச்சாத்திடப்படும் என்றும் அக்கட்சி அறிவித்துள்ளது.

எதிர்க்கட்சி அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் புதன் கிழமை நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்த நாயக்க மேற் கண்டவாறு தெரிவித்தார்.

இங்கு அவர் மேலும் கூறுகையில்,

ஜனநாயகம் மனித உரிமை மற்றும் ஊடகசுதந்திரம் ஆகியவை நாட்டில் மிகவும் மோசமான முறையில் மீறப்பட்டுள்ளதுடன் அது சீரழிக்கப்பட்டுள்ளது.

ஊழல் மோசடிகள் தான்தோன்றித்தனமான வீண்விரயம் நாட்டின் புற்றுநோயைப்போல் பற்றிக் கொண்டுள்ளன. இதற்கு மூலகாரணமாக அமைவது நிறைவேற்று அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்துவதுதான். இந்த அதிகாரத்தைக் கொண்டு நினைத்த மாத்திரத்தில் அமைச்சர்களை அதிகாரிகளை நியமிப்பது உள்ளிட்ட ஜனநாயக விரோத செயற்பாடுகள் அரங்கேற்றப்படுகின்றன.

ஜனாதிபதியின் ஆலோசகர்களும் அமைச்சுக்களின் ஆலோசகர்களும் நாட்டைக் கட்டியெழுப்புவதற்காக ஆலோசனை வழங்குவதை விடுத்து குட்டிச் சுவராக்குவதற்கே உதவி வருகின்றனர்.

எனவே தான் இவ்வாறான நிலைமைகளுக்குக் காரணமாக இருக்கின்ற நிறைவேற்று அதிகாரத்தை இல்லாதொழிப்பதற்கும் நல்லாட்சியொன்றை நாட்டில் நிலைநாட்டுவதற்கும் எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்துள்ளன.

இதே கருத்திலேயே ஜே.வி.பி.யும் இருந்து வருகின்றது. ஆகவே அந்தக் கட்சியுடனும் நாம்பேச்சுக்களை நடத்தி வருகின்றோம். தற்போது எதிர்க்கட்சிகளின் கூட்டணியின் ராஜதந்திர நடவடிக்கைகள் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளன.

அரசியல் கட்சிகள் உட்பட 40க்கும் மேற்பட்ட அமைப்புக்களைக் கொண்ட ஐக்கியதேசிய முன்னணி அரசாங்கத்திற்கு அதிர்ச்சி கொடுக்கும் வகையில் உருவாகி வருகின்றது. நிறைவேற்று அதிகாரத்தை இல்லாதொழிப்பது தொடர்பில் 1997 ஆம் ஆண்டு கதிர்காமத்தில் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சி மாநாட்டிலேயே தீர்மானம் நிறைவேற்றப்பட்டு விட்டது.அது இன்றைய தினத்திற்கும் பொருந்தும்.

எனவே இதனை இல்லாதொழிப்பதற்கு 30 நாட்களுக்குள் எதிர்க்கட்சிகளின் ஆலோசனைகள் பாராளுமன்றத்தில் முன்வைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதேவேளை ஜனாதிபதித் தேர்தலை எதிர் கொண்டதன் பின்னர் 180 நாட்களுக்குள் நிறைவேற்று அதிகாரத்தை ரத்துச் செய்வதற்கான சட்டமூலம் ஒன்றை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து அதனை நிறைவேற்றுவதன் மூலம் பாராளுமன்ற அதிகாரம் கொண்ட அரசாங்கத்தை மீண்டும் ஸ்தாபிப்பதே எமது நோக்கம் இது நிச்சயம் நடைபெறும் என்றார். (ஓ–6)

# வெள்ளி நற்சிந்தனை 95

## பக்தியின் மொழி தமிழ்

கடவுளைக் காணவேண்டும் என்ற ஆவல் ஏற்படும் போது கோயிலை நாடிச் செல்லும் வழக்கம் எம்மிடையே உண்டு. இதற்கு வழிகாட்டியாக நின்றவர்கள் நாயன்மார்களே. திருத் தலங்களுக்குச் சென்று இறைவனைக் காணலாம் என்ற நம்பிக்கையை ஊட்டியவர்களும் அவர்களே. தாமும் திருக் கோயில்களுக்கு யாத்திரை செய்தனர். அவ்வாறு யாத்திரை செய்த போது அவர்களுடன் மக்களும் கூடச் சென்றனர். அந்த அனுபவத்தை நாவுக்கரசர் தனது பாடல்களிலே அழகாகப் பதிவு செய்து வைத்துள்ளார்.

திருவையாறு என்னும் தலத்தை அவர் மெய்யடியார்களோடு சேர்ந்து சென்று தரிசிக்கும் அனுபவம் பெற்றவர். அந்த அனுபவத்தை பாடல்களாக வெளிப்படுத்தியுள்ளார். தன்னுடைய நிலைவ்யயும் அடியார் கூட்டத்தின் நிலையையும் கோயில் சூழலையும் பரவசமாகி நின்று பாடுகிறார்.

அவர் மனத் திரையிலேயே வரைந்து வைத்திருந்த இறைவனைச் சொற்களால் எல்லோரும் காணும் வண்ணம் எடுத்துக்கூறுகிறார். இறைவன் திருக்கோலத்தில் அவரை முதலில் கவர்ந்த திருமுடியின் அழகை முதலில் பாடுகிறார். இளம்பிறையோடு கண்ணி சூடியிருக்கும் கவின் நிறைந்த காட்சியைக் காட்டுகிறார். துண்டப்பிறைசூடிய கோலம் அற்புதமான காட்சியாக அமைந்துள்ளது. ஆண்களின் தலை அலங்கார மரபை அவர் கண்கள் கூர்மையாக நோக்கியுள்ளன. அதேவேளை இறைவன் அருகில் இருக்கும் இறைவியின் குழலிலும் அவர் பார்வை படிகிறது.வண்டுகள் மொய்க்கும் மலர்களைச் சூடிய குழலின் அழகும் பிறை சூடிய இறைவன் சடையும் அழகு நிறைந்த அலங்காரத் தோற்றமாகக் கண்களிலே தென்படப்பாடுகிறார். இந்த அற்புதமான காட்சியை காண்பதற்காக உலகத்துப் பற்றுகளையெல்லாம் கைவிட்டுப் பாடி ஆடிக்கொண்டு வருவதாகப் பாடுகிறார்.


அவருடன் அருள் பெற்ற ஏனைய அடியவர்களும் கூடவே வருகின்றனர். அவ்வாறு நடந்து திருவையாறு திருத் தலத்தை அடைந்த போது அவர் கண்ட காட்சி அவரது வாழ்க்கையில் முன்பு கண்டறியாத காட்சியாகவுள்ளது. தனது நல்ல துணையான பேடையோடு நாரை ஆடி அசைந்து வரும்

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

அழகான காட்சி தென்படுகிறது. நாரைகளின் பாதங் கள் பூமியில் படிந்துவரும் அருள் நிறை நடையைக் காண் கிறார். அப்போது நாரையின் கால்கள் மறைய இறைவன் இறைவியின் திருப்பாதங்கள் தோன்றுகின்றன. தன்னை நோக்கி வரும் தான் காண விரும்பிய பாதங்களைப் பார்த்து மெய்சிலிர்த்து நிற்கிறார். நாரையின் சிவந்த பாதங்களில் இருந்து விழிகளைப் பறிக்க முடியாமல் வியப்புடன் பரவசப்பட்டு நிற்க வாயில் பாடல் பிறக்கிறது.

"முற்பிறைக் கண்ணியினானை மொய் குழலாளொடும் பாடிப்
பற்றிக் கயிறுக் கில்லேன் பாடியுமாட வருவேன்
அற்றருள் பெற்று நின்றாரோ டையாறடைகின்றபோது
நற்றுணைப் பேடையோடாடி நாரை வருவன கண்டேன்
கண்டேனவர் திருப்பாதம் கண்டறியாதன கண்டேன்"





வட மாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தினால் அண்மையில் நடத்தப்பட்ட தமிழ் இலக்கிய விழாவில் 2009ஆம் ஆண்டிற்கான ஆளுநர் விருது வழங்கும் நிகழ்வில் இலக்கியத்துறைக்கான விருதை செல்லையா குமாரசாமியும் பத்திரிகைக்கான விருதை தர்மன் தர்மகுலசிங்கனும் பெற்றுக் கொள்வதைப் படங்களில் காணலாம்.

# கிளி.முல்லை மாவட்டங்களில் அவ்வப் பிரதேச மக்களையே குடியமர்த்துகின்றோம் வேறு பிரதேசத்தவரெவரும் குடியேற்றப்படவில்லை

## பசில் ராஜபக்ஷ

(கொழும்பு)

இடைத்தங்கல் முகாம்களில் தங்கியுள்ள மக்களை மட்டுமே அவர்களது சொந்தக் கிராமங்களில் தங்கவைக்கின்றோமே தவிர வேறு பிரதேசங்களை சேர்ந்தவர்கள் அங்கு குடியேற்றப்படவில்லையென ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் பாராளுமன்ற உறுப்பினருமான பஸில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இடைத்தங்கல் முகாம்களில் அடிப்படை வசதிகளை மேம்படுத்தி மைதானங்களை அமைத்து பாடசாலைகளை ஏற்படுத்தி அம் மக்களை சிறந்த முறையில் வாழவைப்பதற்கும் அத்தோடு அவர்களது சொந்தக் கிராமங்களில் கண்ணி வெடிகளை அகற்றி வீடுகளை அமைத்து திட்டத்தை அமுல்படத்தவும் இருந்தோம்.

ஆனால் சர்வதேசமும் ஒரு சில அரசியல்வாதிகளின் குறுகிய நோக்கங்களுக்காக முட்டுக்கட்டைகளை போட்டு பொய் பிரசாரங்களை மேற்கொண்டதால் இத் திட்டம் நிறைவேறாமல் போனது.

அத்தோடு இடம்பெயர்ந்த மக்களின் பெரும்பாலான வீடுகள் சேதமடைந்துள் ளன. அவ் வீடுகளை திருத்திக்கொள்ள உதவிகளை அரசாங்கம் வழங்கவுள்ளது.

அம்மக்களுக்கு தேவையான அத்தியாவசியப் பொருட்களையும் வழங்கி நிரந்தரமாக வாழ வைக்க வேண்டும். இதுவரை காலமும் 36 ஆயிரம் பேர் யாழ். குடாநாட்டில் பாடசாலைகளில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

ஒரு சிலர் சொல்வதைப் போன்று திடுதிப்பென மக்களை குடியமர்த்த முடியாது. எதிர்வரும் நாட்களில் கிளிநொச்சி மாவட்டத்தில் 10,017 பேரும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 16,396 பேரும் மீளக்குடியமர்த்தப்படவுள்ளனர்.

இவர்களனைவருக்கும் தேவையான வசதிகள் அனைத்தையும் அரசாங்கம் வழங்கும். இவ்வாறு திட்டமிட்டு மக்களை மீள் குடியேற்றும் நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுத்து வருகிறது.

அப் பிரதேசங்களில் வாழ்ந்த மக்களையே குடியேற்றி வருகின்றோமே தவிர வேறு பிரதேசங்களிலிருந்து எவரையும் அங்கு குடியேற்றவில்லையென்றும் பஷில் ராஜபக்ஷ எம்.பி. தெரிவித்தார். (ஓ-6)

## வவுனியாவில் கப்பம் பெற்ற அறுவர் வவு.பொலிஸாரால் கைது

(கொழும்பு)

வவுனியாவை சூழவுள்ள பகுதிகளில் பல்வேறு நபர்களிடமும் வர்த்தகர்களிடமும் கப்பம் பெற்றதாகக் கூறப்படும் 6 சந்தேக நபர்களை வவுனியா மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவினர் கைது செய்துள்ளனர்.

அந்தப் பகுதியில் இடம்பெற்ற வழிப்பறிக்கொள்ளை மற்றும் இரட்டைக்கொலை சம்பவத்துடன் சந்தேகநபர்கள் தொடர்பு பட்டுள்ளதாக தகவல் கிடைத்துள்ளது என உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கடந்த 2006 ஆம் ஆண்டு தொடக்கம் இடம் பெற்றதாகக் கூறப்படும் பல்வேறு குற்றச் செயல்கள் மற்றும் கப்பம் பெறப்பட்ட சுமார் 60 சம்பவங்கள் குறித்து பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளது.

வவுனியா பிரதிப் பொலிஸ்மா அதிபரின் தலைமையில் செயற்படும் மாவட்ட குற்றப் புலனாய்வு தடுப்புப் பிரிவினால் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் தடுத்து வைப்பு உத்தரவின் பேரில் விசாரணைக்கு உடபடுத்தப்பட்டுள்ளதாக அந்த பொலிஸ் அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார். (ஓ)

# தமிழ் மக்கள் எந்தவொரு தேர்தலையும் எதிர்கொள்ள தயாராக வேண்டும்


## மனோகணேசன் எம்.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மற்றும் தெற்கில் வாழு கின்ற தமிழ் மக்கள் ஜனாதிபதி தேர்தல் அல்லது பாராளுமன்ற தேர்தல் ஆகிய எந்தவொரு தேர்தலையும் சந்திப்பதற்கு தயாராக வேண்டும். பெரும்பான்மை கட்சிகளின் சூழ்ச்சிகளை முறியடித்து எமது மக்களின் அரசியல் பிரதி நிதித்துவங்களை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான அரசியல் தந்திரங்களை நாம் கையாளவேண்டிய வேளை வந்துவிட்டது என ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோகணேசன் எம்.பி. தெரிவித்துள்ளார்.

விரைவில் கைச்சாத்திடப்படவுள்ள எதிர்க் கட்சிகளின் கூட்டணி தமிழ் பேசும் கட்சிகளிடையே ஆரம்பிக்கப்பட்டுள்ள பேச்சுவார்த்தைகள் தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது பாராளுமன்ற தேர்தலின் போதும் ஜனாதிபதி தேர்தலின்போதும் கையாளவேண்டிய வழிமுறைகள் பற்றி நாம் ஆராய்ந்து வருகின்றோம். ஜனாதிபதித் தேர்தலின் போது ஒட்டுமொத்தமாக தமிழ் முஸ்லிம் கட்சிகள் எமது மக்களின் அரசியல் அபிலாஷைகளை பிரகடனப்படுத்தி அவற்றுக்கான பெரும்பான்மை கட்சிகளின் நிலைப்பாடுகளை கண்டறிந்த பின்னரே முடிவுகளை எடுக்க வேண்டும் என்பதுவே எமது நிலைப்பாடாகும். இதுவே ஐக்கிய தேசியக் கட்சியுடனான எமது கூட்டணி தேர்தல் உடன்பாடாகும்.



இதைநாம் எப்போதுமே பகிரங்கமாகவே சொல்லிவந்துள்ளோம். எமது இந்த கருத்தை அன்று ஏற்றுக்கொள்ளாதவர்களும் இன்று எமது தேர்தல் நிலைப்பாட்டை புரிந்துகொண்டுள்ளனர். அதிகாரபூர்வமாக ஏற்படுத்தப்படும் கூட்டணி அதில் இடம் பெறும் அனைத்து கட்சிகளுக்கும் சொந்தமானதாகும். கூட்டணி அரசியல் என்பது பெரும்பான்மைக் கட்சிக்கு எமது மக்களின் வாக்குகளை வாங்கிக் கொடுப்பதல்ல. மாறாக கூட்டணியில் போட்டியிடும் எமது ஜனநாயக மக்கள் முன்னணி வேட்பாளர்களை வெற்றிபெறச் செய்து எமது மக்களின் இனரீதியான பிரதி நிதித்துவத்தை உறுதிப்படுத்துவதே எமது நோக்கமாகும். இதற்காகவே நாம் கூட்டணி ஏற்படுத்துகின்றோம்.

இதேவேளை வட கிழக்கில் வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழ் பேசும் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளுடனேயே எமது கொள்கை உடன்பாடு இருக்கும். அவசியமானால் இந்த கொள்கை உடன்பாட்டை தேர்தல் உடன்பாடாகவும் மாற்றி அமைக்க வேண்டிய வழிமுறைகளையும் நாம் தற்சமயம் ஆராய்ந்து வருகின்றோம் என்றார். (ஓ-6)

## இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் விரட்டியடிப்பு

கடலில் மீன் பிடிக்கச் சென்ற இராமேஸ்வர மீனவர்களை இலங்கை கடற்படையினர் விரட்டியடித்துள்ளனர். இராமேஸ்வரத்திலிருந்து நேற்று முன் தினம் இரவு 2 படகுகளில் 8 மீனவர்கள் கடலுக்குள் மீன் பிடிக்க சென்றனர். அவர்கள் அனைவரும் கச்சதீவு பகுதியில் மீன் பிடித்துக் கொண்டிருந்த போது அங்கு வந்த இலங்கை கடற்படையினர் தமிழக மீனவர்களின் படகுகளை கவிழ்த்து விட்டு அவர்களை விரட்டியடித்துள்ளனர். தத்தளித்துக் கொண்டிருந்த மீனவர்களை அந்த வழியே வந்த மற்ற மீனவர்கள் காப்பாற்றி கரைக்கு அழைத்து வந்துள்ளனர். (ஓ-6)

## அதிபர்களுக்கான கூட்டம்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை பி.ப.1 மணிக்கு வலயக் கல்வி அலுவலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு அதிபர்கள் வரும் போது நலன்புரி நிலைய முகாம்களில் இருந்து வந்த மாணவர்களின் வகுப்பு ரீதியான விபரங்களையும் இணைந்து கொண்ட ஆசிரியர்களது விபரங்களையும் மற்றும் நலன் புரி நிலையமாக இயங்கிய பாடசாலைகளின் அதிபர்கள் தமது பாடசாலைகளின் தற் போதைய விபரங்களையும் எடுத்து வரும்படி வலயக் கல்விப்பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் கேட்டுக்கொள்கின்றார். (ஓ-9-29)

✦ ✦ ✦

இவ்வாண்டு நடைபெற்ற 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் மாணவர்களுக்கு 6ஆம் தரத்திற்கு பாடசாலைகளைப் பெற்றுக்கொடுத்தல் தொடர்பான கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை மாலை 2 மணிக்கு யாழ். வலய முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் தகைமை பெற்ற மாணவர்களின் பாடசாலை அதிபர்கள் தவறாது கலந்து கொண்டு தங்கள் பாடசாலைக்குரிய பொதிகளைப் பெற்றுக்கொள்ளுமாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (ஓ-9)

## தவறவிடப்பட்ட கடவுச்சீட்டு அடையாள அட்டை, வங்கிப்புத்தகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். சாலைப் பேருந்தில் தவற விடப்பட்ட கடவுச்சீட்டு, அடையாள அட்டை, வங்கிப் புத்தகம் ஆகியன யாழ். சாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் அவற்றை தொலைத்தவர்கள் அலுவலக நேரத்தில் யாழ். சாலையில் பெற்றுக் கொள்ளலாம் என்றும் யாழ். சாலை முகாமையாளர் எஸ்.யோகநாதன் தெரிவித்துள்ளார்.

கண்டெடுக்கப்பட்ட ஆவணங்களின் விபரம் வருமாறு,

கடவுச்சீட்டு- டீன்.மெகமெட்சாமிம்ன் 711624597V, காத்தான்குடி, கண பதிப்பிள்ளை சந்திரசேகரம் 553512115V செம்பியன் பற்று, அடையாள அட்டை- வராகின் சத்தியசீலன் -787131174V வேலணை, கலாதேவி பஞ்சாட்சரம்-605662471V கொக்குவில், மொனிபஸ் இம்மானுவேல்-672113865 V நாவாந்துறை (வங்கிப் புத்தகம்), ஈஸ்வரி முருகேஸ் -675213178V -கரவெட்டி. (ஓ)

## கருத்தரங்கு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.ஆய்வறிவாளர் அணியத்தின் ஏற்பாட்டில் ஜனநாயக சூழலைப் பலப்படுத்துதல் எனும் தொனிப்பொருளில் கருத்தரங்கு நிகழ்வு நாளை 31ஆம் திகதி சனிக்கிழமை மாலை 3.30 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்குநிகழ்வில் தலைமையுரையினை ஏ.சி.ஜோர்ச்சும், கருத்தரங்கினை பிரான்சிலிருந்து வருகை தந்துள்ள கலை இலக்கிய அரசியல்வாதியான சுகனும் நிகழ்த்தவுள்ளனர்.

இக்கருத்தரங்கில் கலை இலக்கிய அரசியல் ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ச-14)

## ஆசிரியர்களுக்கான செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

தரம் 9 சைவசமய ஆசிரியர்களுக்கான புதிய பாடத்திட்ட வாண்மை விருத்தி செயலமர்வு நாளையும், நாளைமறுதினமும் காலை 8 மணிக்கு வரணி ஆசிரிய வள மத்திய நிலையத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இச்செயலமர்வில் தென்மராட்சிப் பாடசாலைகளில் தரம் 9இற்கு கல்வி கற்பிக்கும் சமய பாட ஆசிரியர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் அறிவித்துள்ளார். (ஓ-9-29)

## யாழ்.வணிகர் கழக கட்டடத் திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.வணிகர் கழகத்தின் புதிய கட்டடத் திறப்பு விழா நாளை சனிக் கிழமை காலை 11 மணிக்கு இல. 165, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணத்தில் திறந்து வைக்கப்படவுள்ளது.

இவ்விழாவில் சகல வர்த்தகர்களையும் கலந்து சிறப்பிக்குமாறு யாழ். வணிகர் கழகம் கேட்டுள்ளது. (ச-3)

# மாணவர்கள் துணிச்சலாக செயற்பட்டு தமது கல்வியைத் தொடர வேண்டும்!

## பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

அன்புக்குரிய மாணவர்களே! உங்களை உங்கள் பெற்றோர்கள் பல்வேறு நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்து எதிர்கால வாழ்வுக்கான நம்பிக்கையையும் கனவையும் சுமந்து அனுப்பி வைக்கின்றார்கள்.

தயவு செய்து தற்கொலை போன்ற செயற்பாடுகளில் ஈடுபட்டு குடும்பத்திற்குச் சோகத்தை ஏற்படுத்தி விடாதீர்கள் என யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கேட்டுள்ளது.

இது தொடர்பில் அவர்கள் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு வருமாறு,

எமது மருத்துவ பீட மாணவர் கௌரிபாலனின் தற்கொலை எமக்குப் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. மிகவும் வறுமைப்பட்ட, வன்னியில் நிகழ்ந்த கொடூரமான போரினால் பாதிக்கப்பட்ட குடும்பத்தைச் சேர்ந்த, தந்தையையிழந்த இவர் குடும்பப் பொறுப்புக்களுடைய மாணவர்.

இவர் தற்கொலை செய்து கொள்கின்ற நிலைக்குச் சென்றிருப்பது மாணவர்கள் மத்தியில் கடுமையான பதற்றத்தையும் விசனத்தையும் ஏற்படுத்தியிருக்கின்றது.

வெற்றியைப் பெறுவதற்காக மாணவர்கள் துணிச்சலாகச் செயற்பட்டு எந்தச் சவால்களுக்கும் முகம் கொடுத்துத் தமது கல்வியைத் தொடர வேண்டும் என நாம் எமது அனைத்து மாணவர்களையும் வலியுறுத்தி நிற்கின்றோம்.

இனிவரும் காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாத வகையில் அனைவரும் இணைந்து செயற்பட வேண்டும் என்பதை மிக அவசியமாகக் கேட்டுக் கொள்கின்றோம்.

அன்புக்குரிய எமது மாணவர்களே! உங்களை உங்கள் பெற்றோர்கள் பல்வேறு நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்து எதிர்கால வாழ்வுக்கான நம்பிக்கையையும் கனவையும் சுமந்து அனுப்பி வைக்கின்றார்கள். தயவு செய்து இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்டு குடும்பத்திற்கும் சமூகத்திற்கும் சோகத்தை ஏற்படுத்தி விடாதீர்கள் என்பதை உங்களிடம் கேட்டுக் கொள்கின்றோம்.

கௌரிபாலனின் குடும்பம் எவ்வளவு துன்பத்தில் மூழ்கியுள்ளது என்பதை சொற்களால் குறிப்பிட்டு விட முடியாது. உங்களது உரிமைகளையும் நியாயப்பாடுகளையும் நீங்களே வென்றெடுக்க வேண்டும்.

மிகவும் துணிச்சலாக அவற்றை எதிர்கொள்வது என்பதே உங்கள்து ஆளுமையும் சமூகப் பொறுப்புமாகும். பாரிய நெருக்கடிகளையும் அவலத்தையும் எதிர்கொண்டிருக்கின்ற எமது சமூகத்தில் நாம் நம்பிக்கை தரும் விதமாக வாழவும் கற்கவும் வேண்டியுள்ளது.

பல்வேறு யுத்த அழிவுகளினால் இழப்புகளின் பிறகு எஞ்சியிருக்கின்ற நாம் எமது சமூகத்தை நம்பிக்கை தருகின்ற விதமாகப் புத்துயிர் ஊட்டிய வழியில் கொண்டு செல்ல வேண்டும்.

வாழ்வுரிமைக்காக உயிர்களைத் தியாகம் செய்த எமது மாணவர் சமூகத்தில் கௌரிபாலன் தனது உயிரையும் வாழ்வையும் கல்விக்காகத் தியாகம் செய்துள்ளார். மாணவர்கள் நிதானமாகவும் கவனமாகவும் கற்று உரிய இலக்குகளை அடைய வேண்டும்.

பரீட்சையில் தோல்வியடைந்திருந்தால் அவற்றை மீள் பரிசீலனைக்கு உட்படுத்தி உண்மையைக் கண்டறிய வேண்டும். எல்லா விதமான சவால்களையும் எதிர்கொண்டு தமது இலக்கை அடையும் வல்லமையுள்ள மாணவர்களாக எமது மாணவர்கள் திகழ வேண்டும்.

இவ்வாறான விடயங்கள் எதிர்காலத்தில் நிகழாத வகையில் விழிப்புடன் நடந்து கொள்ளும்படி ஆசிரிய சமூகத்திடம் வேண்டுகின்றோம்.

மாணவர்களது மனங்களையும் நிலைமைகளையும் புரிந்து செயற்படுவதுடன் அவர்களது பலங்களையும் பலவீனங்களையும் கண்டறிந்து அவற்றுக்குரிய வகையில் கல்வியை வழங்க வேண்டும்.

மாணவர்களது கல்வி நிலையை அறிந்து அவர்களை அடுத்த கட்டத்திற்கு நகர்த்துகின்ற வகையில் ஆசிரியர்களின் வாண்மை விருத்தி அமைய வேண்டும். மாணவர்களின் நிலையறிந்து கல்வியை உரிய வழியில் வழங்குவதே உண்மையான ஆசிரியத்துவமாகும்.

அதிகாரப் போக்குடன் நடப்பதும் தனிப்பட்ட காரணங்களுக்காக மாணவர்களைப் பழிவாங்கும் தொடர்ச்சியான நடவடிக்கைகளும் இவ்வாறான துயரங்களை ஏற்படுத்தி விடுகின்றன.

கல்வியில் குறைவான நிலையில் உள்ள மாணவர்களை அடுத்த கட்டத்திற்கு வெற்றிகரமாக நகர்த்தி நம்பிக்கையூட்டும் விதமாக நடந்து கொள்வது இவ்வாறான சம்பவங்களைத் தவிர்க்கும் என்பதைச் சுட்டிக்காட்டுகின்றோம்.

கௌரிபாலன் ஒட்டுமொத்தமாக எமது மாணவர்களது கல்விக்காகவே தனது உயிரைத் தியாகம் செய்துள்ளார். அவருக்கு நாம் கொடுக்கும் அஞ்சலி என்பதும் மரியாதை என்பதும் இனிவரும் காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாமல் செயற்பட வேண்டிய பாரிய கடமையை உறுதியுடன் அனைவரும் இணைந்து பொறுப்பெடுத்துக் கொள்வதேயாகும்.

விக்னராஜா கௌரிபாலனின் இழப்பின் துயரில் மிகுந்துள்ள அவர்களின் குடும்பத்திற்கு எமது மாணவர்கள் சார்பாக யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் ஈடுசெய்ய முடியாத எமது மாணவனின் இழப்பின் துயரையும் வெளிப்படுத்துகின்றோம்.

அவரது கனவை நிறைவேற்றுவோம் என்பதை உறுதி எடுத்துக் கொள்கின்றோம். அவரது குடும்பத்திற்கும் அனைத்து மாணவர்களுக்கும் நண்பர்களுக்கும் எமது ஆறுதலைத் தெரிவிப்பதுடன் அவரது ஆன்மா அமைதியடைய இறைவனைப் பிரார்த்தித்து நிற்கின்றோம் என்றுள்ளது. (ச)

இவ்வாரம் **BIT Final Year Project Presentation** மேற்கொள்ளும் எமது நிறுவன மாணவர்களுக்கும். எமது நிறுவனத்தில் பயின்று **Diploma in Information Technology** + ான்றிதழை பெறும் மாணவர்களுக்கும் எமது வாழ்த்துக்கள்

--Year 1,2,3 மாணவர்களும் விரிவுரையாளர்களும்

BIT

**2008/09 கொழும்பு பல்கலைக்கழக DIT பெறும் எமது நிறுவன மாணவர்கள்**



P.Asoktha, S.Logeswary, V.Arani, S.Garthiga, K.Janane, P.Senthuja, N.MaryUthista, S.Logini, P.Kobikrishan, N.Aingaresan, S.Kirushanthan, M.Kokulan, J.Satheechan, N.Sanjeevan, S.Mayurathan, S.Mathusoothanan, S.Thiriveny Thirilosiny

**BIT?**
- கொழும்பு பல்கலைக்கழகத்தால் நடாத்தப்படும் மிக உயர் தேர்ச்சி உடைய வெளிவாரிக்கற்கை நெறி.
- A/L 2009 தோற்றியோரும் விண்ணப்பிக்க முடியும்.(BIO,Maths,Arts,Commerce).
- A/L சித்தியடையத்தவறின் FIT எனும் கற்கை நெறியில் சித்தியடைவதன் மூலம் கற்கைநெறியைத் தொடரமுடியும்.
- 1ம் ஆண்டின் முடிவில் DITம், 2ம் ஆண்டின் முடிவில் HDITம் கொழும்பு பல்கலைக் கழகத்தால்வழங்கப்படும்.
- கற்கை நெறியை எந்தவொரு பல்கலைக்கழக மாணவனும் வெளிவாரியாக பயில முடியும்.
- கற்கை நெறியை பகுதியாக பூர்த்தி செய்தோர் லண்டன் பல்கலைக்கழகத்தில் மிகுதிக்கற்கை நெறியை பூர்த்தி செய்ய முடியும்.
- முழுமையாக பூர்த்தி செய்தோர் மேற்படிப்பை தொடர்வதற்கான Student Visa and Work Permit பெற முடியும்.
- பகுதி பகுதியாக செலுத்தக்கூடிய கற்கை நெறிக்கட்டணம் 3 ஆண்டுகளுக்கும் 90,000 ரூபா மட்டுமே.

**MCS?**
- ஜனா அபிவிருத்தி திட்ட ஆதரவுடன் 1999ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட நிறுவனம்.
- BIT கற்கையை பட்டதாரிகளாலும் கணனி பொறியியலாளர்களாலும் கடந்த 6 ஆண்டுகளாக வடமாகாணத்தில் தொடர்ச்சியாக நடாத்திவரும் நிறுவனம். ஆதாரம் கொழும்பு பல்கலைக்கழக BIT கைநூல்.
- BIT கற்கை நெறியின் சிறப்பான (எமது யாழ் மாணவர்களின்) செயற்பாட்டிற்காக கொழும்பு பல்கலைக் கழகத்திடமிருந்து சிறப்பு விருதினை பெற்றுக் கொண்ட நிறுவனம்.
- ICDL, MICROSOFT, CISCO, IBM, SUNMICROSYSTEM, CIW, DELL, COMTIA மற்றும் CIMA நிறுவனங்களின் அங்கீகாரம் பெற்ற பயிற்சிமையமாகவும், பரீட்சை நிலையமாகவும் தொழிற்படும் நிறுவனம்

மாணவர்களை பல்திறன் வாய்ந்தவர்களாக உருவாக்கும் வகையில் BIT மாணவர்களுக்கு

**BIT @ MCS?**
- ICDL (International Computer Driving License)
- MCP (Microsoft Certified Professional)
- MCTS (Microsoft Certified Technology Specialist)
- SCJP (Sun Certified Java Programmer)
- MCSE (Microsoft Certified Systems Engineer)

100% OFF

- CCNA (Cisco Certified Network Associate)

50% OFF

MCS Supported By UNDP/JRRP

324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்

பரமேஸ்வராச்சந்தி அருகே Bus Route 764

பதிவுகள் 31.10.2009 க்கு முன்னர்

(C-3622)

## கரவெட்டி விக்னேஸ்வராவில் இலங்கை வங்கிக் கிளை

கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியில் மாணவர்களின் சேமித்தல் பழக்கத்தை ஏற்படுத்தும் முகமாக இன்று காலை 8 மணிக்கு இலங்கை வங்கியின் புதிய கிளை ஒன்று இலங்கை வங்கியின் யாழ். மாவட்ட பிராந்திய முகாமையாளர் ஏ.சிவநாதனால் திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில் நெல்லியடி இலங்கை வங்கிக் கிளையின் முகாமையாளர், உதவி முகாமையாளர், பாடசாலை சமூகத்தினர் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ச)

## பரிசில் தினம்

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியின் பரிசில் தின நிகழ்வுகள் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரியின் 125-வது ஆண்டு நினைவு மண்டபத்தில் அதிபர் கே. ஆர்.இராஜசேகரம் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.வலயக் கல்விப் பிரதிப் பணிப்பாளர் ஜே.ரவீந்திரன் கலந்து சிறப்பிப்பதுடன், சிறப்பு விருந்தினராக கோப்பாய் பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் எஸ்.மகேந்திரன், கௌரவ விருந்தினராக பழைய மாணவரும், பழைய ஆசிரியருமான பிறிம்றோஸ் குணரத்தினம் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (ஓ)

❖ ❖ ❖ ❖

(யாழ்ப்பாணம்)

நாவாந்துறை றோ.க.வித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழா நாளை காலை 9மணிக்கு அதிபர் எஸ். அன்ரன் தலைமையில் வித்தியாலய பிரதான மண்டபத்தில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மேலதிக மாகாணக் கல்விப் பணிமனையின் பாடசாலை வேலைப் பகுதி பிரதம பொறியியலாளர் கு. சிவபாலனும், கௌரவ விருந்தினராக சோவா நிறுவன நிகழ்சித்திட்ட முகாமையாளர் ஜேசுதாசன் யூட் வால்ரனும் கலந்து கொள்கின்றனர்.

பரிசில்களை திருமதி வசந்தமாலா சிவபாலன் வழங்கி கௌரவிப்பார். (ச)

## அதிபர்களுடனான கலந்துரையாடல்

வலிகாமம் வலயத்தில் தரம் 5புலமைப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களையுடைய பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் இன்று பிற்பகல் 2.00 மணிக்கு வலிகாமம் வலயக் கல்வி அலுவலகத்தில் நடைபெறும்.

சித்திபெற்ற மாணவர்க்குரிய எ,பி,சி படிவங்களும், உரிய அறிவுறுத்தல்களும் வழங்கப்படவுள்ளமையால் சம்பந்தப்பட்ட அதிபர்கள் தவறாது சமுகம் தருமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார். (ச)

❖ ❖ ❖ ❖

யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெற்றுவரும் புத்தகக் கண்காட்சியும், விற்பனையும் நிகழ்வில் பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களிற்கும் பொருத்தமான நூல்களைக் கொள்வனவு செய்வது தொடர்பான கலந்துரையாடல் இன்று முற்பகல் 11 மணிக்கு எம்.டி.குணசேன புத்தகசாலை நிறுவனத்தினரின் ஏற்பாட்டில் யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் 1எபி, 1சி, வகை 2 பாடசாலைகளின் அதிபர்களை தவறாது கலந்து கொண்டு பயன் பெறுமாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கேட்டுள்ளார். (ச-14)

## நிதி, மராமத்து மற்றும் சுகாதாரக் குழு யாழ்ப்பாண மாநகர சபையில் நியமனம்

யாழ்.மாநகர சபையின் முதலாவது அமர்வின் போது நிதி,மராமத்து மற்றும் சுகாதாரத்துக்கான குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இக்குழுக்களில் நிதிக் குழுவுக்கு யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். ஏனைய குழுக்களுக்கான தலைவர் பதவி அடுத்து நடைபெறும் அமர்வின் போது தெரிவு செய்யப்படவுள்ளது.

நிதிக்குழுவில் மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசாவை தலைவராக்க் கொண்டு எம்.கனகரட்ணம், சு.சுபியான், மு.றெமேடியஸ், மு.ரமீஸ், பி.கனகரட்ணம் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மராமத்து குழுவுக்கு து.இளங்கோ, மு.கோமகன், எக்ஸ் றெடிட் கிறேசியன்,திருமதி மரிய கோரத்து அன்ரன்,ந.ராஜதேவன், நெ.அஜ்மயில் ஆகியோரும்

சுகாதாரக் குழுவில் மனுவல் மங்களநேசன், சு.விஜய காந்த்,சு.நிஷாந்தன், பெ.ஜேக்கப், மீரா சாலிப் முஸ்தப்பா அஜ்மஜித் ஆகியோரும் நியமிக்கப்பட்டுள்ளனர். (ச)

## புத்தகக் கண்காட்சிக்குச் செல்லும் மாணவர்களுக்குப் பிரயாண ஒழுங்கு

கல்வி அமைச்சின் புத்தகக் கண்காட்சியும், விற்பனை நிகழ்வும் யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெற்று வருகின்றது. இந்த புத்தகக் கண்காட்சிக்கும், விற்பனை நிகழ்வுக்கும் செல்லவுள்ள யாழ்.வலய மாணவர்களுக்கு எம்.டி.குணசேன புத்தகசாலை நிறுவனத்தினால் பயண ஒழுங்குகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன என யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார்.

ஒவ்வொரு பாடசாலைகளிலிருந்தும் தரம் 5முதல் 13 வரையான 50 மாணவர்கள் இதில் பங்குபற்றலாம். இதில் பங்குபற்றி புத்தகங்களை பார்வையிட்டு தமக்கு தேவையான புத்தகங்களை வாங்கமுடியும்.

இன்று வெள்ளிக் கிழமை காலை 9.00 மணிக்கு கனகரட்ணம் மத்திய மகாவித்தியாலயம், 9.45மணிக்கு சென்.ஜேம்ஸ் மகா வித்தியாலயம், 10.30 மணிக்கு நாவாந்துறை றோ.க.த.க, 11.15 மணிக்கு கொட்டடி நமசிவாய வித்தியாலயம் என்ற ஒழுங்கில் பிரயாண ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ச)

## 19ஆவது வருட வெளியேற்றமும் கௌரவமான மீள் குடியமர்வும்

## முஸ்லிம் மக்களின் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

19ஆவது வருட பலவந்த வெளியேற்றமும் கௌரவமான மீள்குடியமர்வும் எனும் தலைப்பிலான நிகழ்வு இன்று மாலை 3 மணிக்கு யாழ். ஒஸ்மானியாக் கல்லூரியில் முஸ்லிம் முன்னணி தலைவர் அல்ஹாஜ் எம்.ஏ.எம். குத்தூஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இது தொடர்பாக முஸ்லிம் மக்கள் பணி மனையினால் வெளியிட்ட செய்திக் குறிப்பு வருமாறு,

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள யுத்த மற்ற சூழ்நிலையில் இடம் பெயர்ந்த மக்களை குடியேற்றும் நடவடிக்கையை அரசாங்கம் முன்னெடுத்து வருகின்றது.

கடந்த 19 வருடங்களுக்கு முன் வடக்கிலிருந்து முஸ்லிம் மக்கள் வெளியேற்றப்பட்டு இம் மாதத்துடன் 19 வருடங்கள் மிகவும் பல துயரங்களுடன் முடிவடைந்து விட்டது.

இவ்வைபவத்திற்கு சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பிரதம அதிதியாகவும் யாழ். மாநகர மேயர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, யாழ். அரச அதிபர் க.கணேஷ் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் கலந்து கொள்ள இருக்கின்றனர்.

இவ்வைபவத்தில் முஸ்லிம்களுக்கு மீள் குடியேற்ற ஊக்குவிப்பு உதவிகளும் வழங்கப் படுமென அமைப்பாளர் யாழ். மாநகரசபை உறுப்பினர் அல்ஹாஜ் ஏ.எஸ்.சுபியான் மௌலவி கூறினார். (ச)

## சிறுபான்மைக் கட்சிகள்...

எதிர்வரும் தேர்தல்களின்போது பொதுவான ஒரு சிறுபான்மைக் கட்சிக் கூட்டணியை உருவாக்குவது தொடர்பில் கவனம் செலுத்தப் பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பு ரேணுகா ஹோட்டலில் தமிழ்-முஸ்லிம் கட்சிகளுக்கு இடையில் சுமார் 2 மணி நேரம் பேச்சுவார்த்தை நடைபெற்றதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன், தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி, புளொட் அமைப்பின் தலைவர் டி.சித்தார்த்தன் மற்றும் ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியின் பிரதிநிதிகள் ஆகியோர் இந்த சந்திப்பில் கலந்து கொண்டுள்ளனர்.

அதிக எண்ணிக்கையிலான சிறுபான்மைக் கட்சிகளை ஒன்றிணைத்து விரிவான ஓர் கூட்டணியை அமைப்பது குறித்துக் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது. வடக்கில் இடம்பெயர்ந்துள்ள மக்களைமீளக்குடியேற்றுவது, கிழக்குமாகாணத்தில் காணி பகிர்வுப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது, எதிர்வரும் தேர்தல்களில் தமிழ்பேசும் கட்சிகள் ஆதரவளிப்பதற்காக கடைப் பிடிக்க வேண்டிய நடைமுறைகள் உள்ளிட்ட 8 விடயங்கள் தொடர்பாகக் குறித்த கட்சிகள் பேச்சுவார்த்தை நடத்தி இறுதி இணக்கத்தை ஏற்படுத்திக் கொண்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை மீண்டும் கூடி பேச்சுவார்த்தை நடத்தவுள்ள இந்தக் கட்சிகள் இதன்பின்னர் இணைந்து ஊடக மாநாடு ஒன்றை நடத்தித் தமது முன்னணி குறித்து அறிவிக்கவுள்ளன. சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இந்த முன்னணியை ஏற்படுத்துவதில் முனைப்புடன் செயற்பட்டு வருகின்றது. இந்தக் கூட்டணியில் இணைந்து கொள்வதற்குத் தமிழ், முஸ்லிம் கட்சிகள் ஏற்கனவே இணக்கம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத் தக்கது. (ச)

## வவு.,யாழ். நலன்புரி முகாம்களில் இருந்த...

பேரும் அடங்குவர். அத்துடன் மிருசுவில், கைதடி நலன்புரி முகாம்களில் இருந்து யாழ். மாவட்டத்தைச் சொந்த இடமாகக் கொண்ட 526 குடும்பங் ளைச் சேர்ந்த ஆயிரத்து 474 பேர் சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இம்மக்களை அந்தந்த பிரதேச செயலகர்கள் பொறுப்பேற்று குடும்பப்பதிவுகள் மேற்கொண்டு உறவினர்களுடன் செல்ல அனுமதித்தனர். இவ்வாறு நேற்று மீள் குடியமர்த்தப்பட்ட ஆயிரத்து 415 குடும்பங்களைச் சேர்ந்த 4 ஆயிரத்து 91பேருடனும் நேரில் வந்து கலந் துரையாடிய சமூக சேவைகள் மற்றும் சமூகநலத்துறைஅமைச்சர்டக்ளஸ்தேவானந்தா 5 ஆயிரம்ரூபாய்நிதியுதவியைவழங்கிவைத்தார்.

இதனைவிட யாழ்ப்பாண நலன்புரி முகாம்களில் தங்கவைக்கப்பட்டிருந்த வவுனியா, மன்னார் மாவட்டங்களைச் சொந்த இடமாகக் கொண்ட 102 குடும்பங்களைச் சேர்ந்த 306 பேர் நேற்று அனுப்பிவைக்கப்பட்டனர். இதில் மன்னார் மாவட்டத்தை சொந்த இடமாகக் கொண்ட 32 குடும்பங்களைச் சேர்ந்த 120 பேரும், வவுனியாமாவட்டத்தைசொந்தஇடமாகக் கொண்ட 70 குடும்பங்களைச் சேர்ந்த 186 பேரும் அடங்குவர்.

இம்மக்கள் அனைவரையும் வவுனியாவில் வைத்து அந்தந்த பிரதேச செயலர்களிடம் யாழ். மாவட்ட செயலக உதவித்திட்ட பணிப்பாளர் எஸ். சுதர்சன் கையளித்தார்.

அத்துடன் வவுனியா நலன்புரி முகாம்களில் இருந்து யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 3ஆயிரம் பேர் இன்று யாழ்ப்பாணத்திற்கு அழைத்துவரப்படு கின்றனர்.

இம் மக்களில் தெல்லிப்பழை பிரதேச செயலக பிரிவைச் சேர்ந்த ஆயிரம் பேர் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்திற்கும் சங்கானை பிரதேச செயலக பிரிவைச் சேர்ந்த 2ஆயிரம் பேர் வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி, தொழில்நுட்பக் கல்லூரி மைதானத்திற்கும் அழைத்து வரப்படுவர்.

இதேவேளை நேற்று நடைபெற்ற மீள் குடியேற்ற நடவடிக்கையை யாழ். அரச அதிபர் க.கணேஷ், யாழ். மாவட்ட திட்டப்பணிப்பாளர் எம்.பிரதீபன் மற்றும் பிரதேச செயலாளர்களும் நேரில் சென்று முன்னெடுத்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-5)

## முகாமைத்துவமாணி இணைய வழிக்கற்கை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவமாணி இணைய வழி கற்கை நெறி ஆரம்ப விழா நாளை காலை 8.30 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக நூலக மண்டபத்தில் நடைபெற வுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ மற்றும் வணிகபீட பீடாதிபதி கே.தேவராஜா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் பிரதம விருந்தினராக கலந்து கொள்கிறார்.

சிறப்பு விருந்தினராக பொறியியலாளர் லலித் லயனகே,கலாநிதி சனத் ஜெயசேன ஆகியோரும் கலந்து கொள்கின்றனர். (ச-3)

## ஜி.எஸ்.பி. பிள...

பட்டுள்ளது.பிரித்தானிய நாடாளுமன்றத்தில் நடை பெற்ற விவாதத்தில் அந்நாட்டு சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் மைக்கெல் போஸ்டர் தெரி வித்துள்ளார்.

ஜி.எஸ்.பி பிளஸ் சலுகைத் திட்டம் வழங்குவது தொடர்பில் பின்பற்றப்படும் நிபந்தனைகள் முழு அளவில் அமுல்படுத்தப்பட வேண்டும் என்பதே பிரித்தானியாவின் நிலைப்பாடு என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மனித உரிமை விவகாரங்கள் காரணமாக இலங்கைக்கு ஆதரவளிக்கக் கூடாது என சில எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் சுட்டிக்காட்டியிருந்தனர். (ச-5)

## தமிழீழம் தவிர்ந்த வேறொரு தீர்வை...

நிறைவேற்றப்பட்டது. வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் அடித்தளமே தனித் தமிழீழமே ஆகும். இத்தனித் தமிழீழத்திற்கே மக்கள் அப்போது ஆணை வழங்கியிருந்தனர்.

இன்றும் அதில் உறுதியாக உள்ளனர். இதை விடுத்து நாம் மக்களின் ஆணையை புறக்கணித்துவிட்டு குறைவான எந்தவொரு தீர்வுக்கோ அல்லது சமஷ்டி முறையிலான ஒற்றையாட்சி தீர்வுக்கோ இறங்கிச் செல்ல முடியாது.

தமிழீழக் கொள்கைக்காகவே எத்தனையோ போராளிகளும் பொதுமக்களும் தமது இன்னுயிரைத் தியாகம் செய்துள்ளனர். எனவே அவர்களின் தியாகத்தை எவரும் மறந்துவிட முடியாது.

அவர்களின் அடிச்சுவட்டில் நின்று நாம் செயல்பட வேண்டும்.

அப்போது தான் அவர்களின் கனவு நனவாகும் என்று தெரிவித்துள்ள ஜெயானந்தமூர்த்தி,

நான் தவிர்க்க முடியாத காரணத்தினால் தற்போது ஐரோப்பிய நாடொன்றில் தங்கியுள்ள போதிலும் எமது கொள்கையில் இருந்து நான் மாறப்போவதுமில்லை தமிழ் மக்களுக்கான அரசியல் வேலைத்திட்டங்களில் இருந்து விலகப்போவதுமில்லை.

தற்போதும் எனக்கு வாக்களித்த மக்களுடன் தொடர்பில் இருந்து கொண்டே இருக்கின்றேன். எமது தமிழீழத்திற்காக- தாயகத்திற்காக தொடர்ந்து குரல் கொடுத்துக் கொண்டே வருகின்றேன். சந்தர்ப்பவாதத்திற்கு ஏற்ற வகையில் நாம் எமது கொள்கையை மாற்ற முடியாது.

அதில் உறுதியுடன் இருக்க வேணடும். இதுவே எனது சிந்தனை. தமிழ் தேசியக் கூட்டமைப் [illegible] உருவாக்குவதில் முக்கியபங்கு வகித்தவன் [illegible]வகையில் அதன் நோக்கத்திலும் அது எதற்[illegible]க உருவாக்கப்பட்டது என்ற கொள்கையில் இருந்தும் விலகிச் செல்ல முடியாது. இன்று கூட்டமைப்பு பற்றி முடிபுகள் எடுக்க முனைபவர்கள் இது பற்றி விளங்கிக் கொள்ளவேண்டும் என்றும் தெரிவித்துள்ளார். (ச-5)






## ஜெனரல் சரத் பொன்சேகாவின்...

பெயர்களை அரசியல் நோக் கத்திற்காக பயன்படுத்தும் ஊடகங்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கூப்படும் என்று ஊடக மத்திய நிலையம் அறிவித்துள்ளது.

அவ்வாறாயின் ஊடக தணிக்கை ஏதும் செய்யப்பட்டுள்ளதா? என்றும் ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பினர்.

கேள்விகளுக்குப் பதிலளித்து கொண்டிருந்த அமைச்சர் படையினரின் நலனில் இந்த அரசாங்கம் கூடுதலான அக்கறை காட்டிவருகின்றது. கடந்த காலங்களில் சேவையாற்றிய உயரதிகாரிகளுக்கு மட்டுமல்லாது எதிர்கால உயரதிகாரிகளுக்கும் உரிய சகலவிதமான விடயங்களையும் அரசாங்கம் செய்து கொடுத்துள்ளது என்று கூறிய ஊடக அமைச்சர் இந் நிலையில் கருத்து கூற விரும்பவில்லை என்றார்.

இதேவேளை இராணுவத்தில் சேவையாற்றுபவர்களின் பெயர்களை பயன்படுத்துவது தொடர்பில் சில சம்பிரதாயங்கள் இருக்கின்றன.

இராணுவ சட்டத்தின் பிரகாரம் சிலவற்றை செய்ய முடியாது. எனினும் ஊடகங்களுக்கு இவ்வாறான அறிவிப்புக்கள் விடுவிக்கப்பட்டனவா? என்பது தொடர்பில் எனக்கு தெரியாது. தகவல்களை பெற்று கருத்து தெரிவிக்கின்றேன் என்றார். (ச-5)


போட்டிப் பரீட்சைகளுக்கான வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன

S.L.A.S முகாமைத்துவ உதவியாளர்

சனி. ஞாயிறு 2.30-5.00 மணிவரை

முகாமைத்துவ உதவியாளர் வழிகாட்டி நூல் வெளிவந்துவிட்டது (தொகுப்பு: த.தவசேகர்)

யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு (யாழ். போதனா வைத்தியசாலை முன்பாக)

(3863)


## ஜே.ஆரின் நிறை...

கற்பனையான கோரிக்கை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அவ்வாறு நிறைவேற்று அதிகார முறை மையை இல்லாதொழித்தால் தற்போது காணப்படும் தேர்தல் முறைமையிலும் மாற் றங்களை ஏற்படுத்த வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-5)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.10.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.